உ

சிவமயம்

# குமரகுருபரன்

மலர் 27] | பங்குனி மீ 1-ம் உ (14-3-76) | [இதழ் 3



தனிப் பிரதி 60 பைசா  வருடச் சந்தா ரூ. 7-00

தி 3118

## ஆசிரியர் குழு


1. திரு. Dr. K. சிவராமன் அவர்கள், M. A.,

சைவ சித்தாந்த தத்துவ விரிவுரையாளர்.
காசிச் சர்வகலாசாலை, காசி

2. திரு. கே. எம். வேங்கடராமையா அவர்கள் M.A., B.O.L.

ஓய்வுபெற்ற செந்தமிழ்க்கல்லூரி பிரின்ஸ்பால், திருப்பனந்தாள்,

3. திரு பி. செந்தில்நாயகம் பிள்ளை அவர்கள் B. A.,

ஓய்வுபெற்ற மாவட்ட வருவாய் அதிகாரி, புளியங்குடி.

4, திரு. டி. எச், விவேகானந்தம்பிள்ளை அவர்கள் [J. P.]

B. A. L. T. ஓய்வுபெற்ற அசிஸ்ட்டண்டு கமிஷனர், சென்னை–86

5. Dr. T. B. சித்தலிங்கம் அவர்கள் M. A. Phd.

அஞ்சல் வழிக்கல்வித்துறை, மதுரை பல்கலைக்கழகம், மதுரை–2

K. சுப்பிரமணிய பிள்ளை,

கௌரவ நிர்வாக ஆசிரியர்.


## உள்ளுறை

பக்கம்


1. அருள் மொழி அமுது ... 145
2 அலங்கார நாயகன் 19 ... 151
3. எத்தனை கண்கள் வேண்டும் ... 156
4. இறைவனே நமது உண்மையான அம்மையப்பன் ... 159
5 ஞானசம்பந்தப் பெருமான் அருளிய தமிழ் மொழியின் சிறப்புக்கள் ... 163
6. ஞானசம்பந்தரும் நற்றமிழும் ... 166
7. உயர்மானுடம்–7 தினக்கடமைகள் ... 171
8. துறவினில் அகம் ... 175
9. திருமுருகாற்றுப்படை உரை விளக்கம் ... 179
10. முத்தும்–முத்தமும் (3) ... 184
11. ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம் ... 189
12. மூன்றும் திருமுறையின் முதற்பாடல்கள் ... 192

T-UN-452

# PRESS & REGISTRATION OF BOOKS ACT.

Registration of Newspapers (Central) Rules, 1956.

FORM IV (SEE RULE 8)

R: No. 1485/57.

## Statement about ownership & other particulars about "KUMARAGURUPARAN" - (Monthly)

1. Place of Publication ... Srivaikuntam
2. Periodicity of its publication ... Monthly
3. Printer's Name ... Kumaraguruparan Achagam
   Nationality ...
   Address ... Sakattukara Street, Srivaikuntam
4. Publisher's Name ... K. Subramania Pillai
   Nationality ... Indian
   Address ... Permanent President, 'Srivaikuntam Sri Kumaraguruparan Sangam'
5. Editor's Name ... K. Subramania Pillai
   ... Indian
   ... Managing Editor
   ... Srivaikuntam
6. Names and addresses of individuals who own the newspapers and partners or shareholders holding more than one percent of the total capital. ... Srivaikuntam ... Sri Kumaraguruparan Sangam (Registered under Act XXI of 1860)

I, K. Subramania Pillai, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

K. Subramania Pillai
Signature of Publisher.

14—3—76.

திருச்செந்திலாண்டவன் துணை

## 'குமரகுருபரன்'' பத்திரிகைக்கு ஆயுள் சந்தா ரூ. 100/- (நூறும்) அன்புடன் வழங்கிய நண்பர்கள் விபரம்

| தொடர் எண் | பெயர் | விலாசம் |
|---|---|---|
| 1. | திரு. ஆ. ந. கருப்பசாமி பிள்ளை, அவர்கள் | 56 வடக்கு ரத வீதி, தூத்துக்குடி. |
| 2. | ,, P. P. Shanmuga Mudaliar, அவர்கள் | Colour yarn Merchant TIMIRI P.O. N.A.Dt. |
| 3. | ,, செயலாளர் அவர்கள் | மறைமலையடிகள் மன்றம் பு. புளியம்பட்டி (அ.நி.) ஈரோடு வழி, கோவைமாவட்டம் |
| 4. | ,, பண்ணுடி N. S. நல்ல சாமி அவர்கள் | ஓ.நஞ்சகவுண்டன்பாளையம் ஒடத்துரை P.O. ஈரோடுவழி |
| 5. | ,, V.M. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் | முத்துவீரண்ண செட்டித் தெரு ச. வாழப்பாடி அஞ்சல் சேலம் மாவட்டம். |

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை




மலர் 27 | இராக்ஷஸ ௵ பங்குனி ௴ 1௳ [14—3—76] | இதழ் 3

நமச்சிவாயவே ஞானமுங் கல்வியும்
நமச்சிவாயவே நானறி விச்சையும்
நமச்சிவாயவே நாநாவின் றேத்துமே
நமச்சிவாயவே நன்னெறி காட்டுமே.

திருச்சிற்றம்பலம்

# அருள் மொழி அமுது

திரு. ஸ்ரீ ராமநாமப்பரதேசி அவர்கள்,
3119, கீழ இரண்டாம் வீதி.
புதுக்கோட்டை-1, திருச்சி மாவட்டம்.

## 29. B அன்பர் அப்பரானார்!

## (அப்பர் சுவாமிகள் சரித்திரம்)

சமய நெறியைக் காக்க வேண்டுவதில்லை. சமயத்தைத் தான் காக்கவேண்டும் என்பது சமணரின் எண்ணம்போலும்! அதனால் அரசனிடம் சென்று "நமது சமயத்தைஅழித்த தரும

சேனனைத் தண்டிக்கவேண்டும்! என அலறுகின்றனர். அரசனும் தமது மந்திரிகளை அனுப்பி நாவுக்கரசரைத் தன்னிடம் வருமாறு அழைக்கிருன்! இறைவனது அருளைப் பெற்றவர் எவருக்குப் பயப்படவேண்டும்?

திருச்சிற்றம்பலம்

நாமார்க்கும் குடியல்லோம்! நமனை அஞ்சோம்! நரகத்தில்
இடர்ப்படோம்! நடலையல்லோம்!
ஏமாப்போம்! பிணியறியோம்! பணிவோமல்லோம்! இன்பமே
எந்நாளும் துன்பமில்லை
தாமார்க்கும் குடியல்லாத் தன்மையான சங்கரன்; நற்சங்க
வெண் குழையோர் காதில்
கோமாற்கே நாமென்று மீளா ஆளாய் கொய்ம்மலர்ச்
சேவடி குறுகிஞேமே.

திருச்சிற்றம்பலம்

என நாவுக்கரசர் வாக்கிலிருந்து புறப்படுகிறது ஒரு அழகிய பாடல். தங்களையழைத்துச் செல்லாவிடில் அரசன் எங்களைத் துன்புறுத்துவான் என மந்திரிகள் கூறினர். ''எல்லாவற்றிற்கும் இறைவன் இருக்கிருன்'' என நம்பிய நாவுக்கரசர் அவர்களுடன் பாடலிபுத்திரம் வந்தனர். நாவுக்கரசரை சுண்ணும்புக்காளவாயிலிடுமாறு அரசனுக்குச் சமணர் யோசனை கூறினர். நீற்றறையில் விடப்பட்ட அடிகளார்

திருச்சிற்றம்பலம்

மாசில் வீணையும் மாலை மதியமும்
வீசு தென்றலும் வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை பொய்கையும் போன்றதே
ஈசன் எந்தை இணையடி நீழலே.

திருச்சிற்றம்பலம்

என்ற பாடலை அருளினர். ஏழுநாட்கள் சுண்ணும்புக் காளவாயிலிருந்த நாவுக்கரசர்

ஆனந்த வெள்ளத்தின் இடைமூழ்கி அம்பலவர்
தேனுந்து மலர்ப் பாதத் தமுதுண்டு தெளிவெய்தி
ஊனந்தான் இலராகி உவந்திருந்தார் தமைக்கண்டே
ஈனந்தாங்கிய திலதாம் என்ன அதிசயம் என்ருர்.

சுகமாக இருந்தது கண்டு சமணர் திகைத்தனர். முன்னர் சமண சமயத்தில் இருந்தபோது நம் மந்திரங்களை அறிந்தவ

னுக இருந்தானல்லவா? அந்த சக்தி கொண்டு பிழைத்துக் கொண்டான். இனி நஞ்சைக் கொடுப்போம் என்றனர்.

"நஞ்சும் அமுதாம் எங்கள் நாதன் அடியார்க்கு"

என எண்ணிய பெரியவர் நஞ்சுகலந்தபாலை அருந்தினர். விடமுண்டும் உயிரோடிருந்தவரைக் கண்டு வியந்த சமணர்கள் 'நம் சமயத்தில்உள்ள விடம்தீர்க்கும் மந்திரத்தைக் கொண்டு பிழைத்தான். இனி யானையை அவனை நோக்கி விடுவோம்" என்ன, சீறி வருகிறது வேழம்.

கூடத்தைக் குத்தி ஒரு குன்றமெனப் புறப்பட்டு
மாடத்தை மறித்திட்டு மண்டபங்கள் எடுத்தெற்றி
தாடத்திற் பரிக்காரர் தலைஇடறிக் கடக்களிற்றின்
வேடத்தால் வருங்கூற்றின் மிக்கதொருவிறல் வேழம்

என யானை வரும் பயங்கரத்தை வர்ணிக்கிறது இம்மந்திரக் கவிதை. நாம் இறைவனுடைய அடிமை "**நாம் அஞ்சுவதியாதொன்றுமில்லை, அஞ்ச வருவது மில்லை**" எனப்பாடினர்.

அருகில் வந்த யானையைத் தனது கண்களால் நோக்கியருளினர் அடிகள். கண்களால் பார்த்து அனுக்ரகம் செய்வதை சக்ஷு தீக்ஷை என்பர். யானை தானே சிவனடியாராக மாறி, நாவுக்கரசை வலம்வந்து வணங்கித் திரும்பியது.

யானையிடமிருந்து தப்பிய பெரியவரைக் கல்லுடன் கட்டிக் கடலிலே விடுமாறு செய்தனர். பிஞ்சுமதி சூடியாம் பெருமானின் அஞ்செழுத்தை நெஞ்சமுத்தி வணங்கினர் நாவுக்கரசர்

*திருச்சிற்றம்பலம்*

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடிப் பொருந்தக் கைதொழ
கற்றுணைப் பூட்டியோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணையாவது நமச்சிவாயவே.

*திருச்சிற்றம்பலம்*

என்று வணங்கியகாலத்தில் கல் மிதந்தது. மும்மலங்களாகிய கல்லில், நல்வினை தீவினைகளாகிய இரு கயிறுகளால் கட்டப்பெற்ற உயிர்களை, பிறவிக் கடலில் முழுகாத வண்ணம் காப்

பாற்றும் ஐந்தெழுத்து நாவுக்கரசரைக் கடலில் முழுகாத வண்ணம் காப்பாற்றியது. திருநாவுக்கரசரை தனது அலைகளான கைகளால் தாங்கிச் செல்லுதற்கு வருணனும் தவம் செய்துள்ளான் என்கிறார் கவிஞர்,

அருள் நயந்து அஞ்செழுத்து ஏத்தப் பெற்ற அக்
கருணை நாவரசினைத் திரைக் கரங்களால்
தெருள் நெறி நீர்மையின் சிரத்தில் தாங்கிட
வருணனும் செய்தனன் முன்பு மாதவம்.

திருநாவுக்கரசர் திருப்பாதிரிப்புலியூரில் கரையேறினர். கரையேறிய இடம் கரையேறவிட்ட குப்பம் எனஇன்றும் விளங்குகின்றது. திருப்பாதிரிப்புலியூர்சிவபெருமானையடைந்து தனக்குத் துணை செய்த பெருமையையும் கருணையையும் எண்ணி,

திருச்சிற்றம்பலம்

ஈன்றாளுமாய் எனக் கெந்தையுமாய்; உடன் தோன்றினராய்
மூன்றாய் உலகம் படைத்துகந்தான்; மனத்துள்ளிருக்க
ஏன்றான் இமையவர்க்கன்பன் திருப்பாதிரிப் புலியூர்த்
தோன்றாத் துணையாயிருந்தான் தன்னடி யோங்களுக்கே.

திருச்சிற்றம்பலம்

எனப்பாடிக் களித்தார். பின்னர் தனது சூலையைத் தவிர்த்துத் தன்னைத் தடுத்தாட் கொண்ட திருவதிகைப் பெருமானைக் காணச் சென்றனர். திருவதிகை மக்கள் நாவுக்கரசைக்கண்டு அவரது நலங்கண்டு இன்பமும், அவருக்கு ஏற்பட்ட துன்பங்களையறிந்து துன்பமும் கொண்டனர். 'கருணையின் உருவமான இவரைத் துன்புறுத்திய சமணர் எவ்வளவு கல்நெஞ்சுக்காரர்கள்? எப்படி இவருக்குத் துன்பம் உண்டாக்க அவர்களுக்கு மனம் வந்தது?' என்றெல்லாம் ஆச்சரியமும் வருத்தமும் அடைந்தனர். திருவதிகை புகுந்த நாவுக்கரசரின் அன்புருவத்தை

தூய வெண்ணீறு துதைந்த பொன் மேனியும் தாழ்வடமும்
நாயகன் சேவடி தைவரும் சிந்தையும் நைந்துருகிப்
பாய்வது போலன்பு நீர் பொழிகண்ணும் பதிகச் செஞ்சொல்
மேய செவ்வாயும் உடையார் புகுந்தனர் வீதியுள்ளே.

எனக் கவிதைக் கண்ணாடியால் படம் பிடித்துக் காட்டுகிறார். அரசன் மகேந்திர பல்லவன் சமணத்தை விடுத்து, சைவனாகி,

சமணர்களின் பாழிகளை இடித்து குணபரச்சுரம் என்ற கோயிலைக் கட்டினன். நாவுக்கரசர் இறைவனது கருணையை எண்ணி உருகி, தான்வேறு சமயத்திலிருந்து வீண்பொழுது போக்கிய தன்மையை எண்ணி எண்ணி வருந்தினர். பல தலங்களுக்கும் சென்று பரமனைப் பாடிக் கொண்டிருந்தார். பெண்ணுகடம் என்ற ஊரில் வந்து, புறசமயத்திலிருந்த இவ்வுடலும்வாழ நான் விரும்பவில்லை. நான் உயிர்வாழ வேண்டுமென்ருல் உனது திரிசூலம் ரிஷபக் குறியை என்தோள்களில் பொறிக்க வேணுமென வேண்டினர்.

திருச்சிற்றம்பலம்

பொன்னர் திருவடிக் கொன்றுண்டு விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னுவி காப்பதற்கு இச்சையுண்டேல் இருங்கூற்றகல
மின்னுரு முவிலைச் சூலம் என்மேற் பொறி மேவு கொண்டல்
துன்னர் கடந்தையுள் தூங்கானை மாடச் சுடற் கொழுந்தே.

திருச்சிற்றம்பலம்

ஒருவருமறியாமல் சிவகணங்களுள் ஒன்று தோன்றி, நாவுக்கரசரின் தோள்களில் சூல-இடபமுத்திரை பொறித்து மறைந்தது. பின்னர் திருநாவுக்கரசர் தில்லை சேர்ந்தார். தில்லையில் அம்பலக்கூத்தனின் தரிசனம் கண்டு உருகினர் என்பதைப் பாடுகிருர் கவிஞர்.

கையும் தலை மிசை புனை அஞ்சலியன; கண்ணும் பொழிமழை ஒழியாதே
பெய்யும் தகையன; கரணங்களும் உடன் உருகும் பரிவின பேறெய்தும்
மெய்யும் தரைமிசை விழுமுன்பு எழுதரும் மின்தாழ் சடையொடு நின்ருடும்
ஐயன் திருநடம் எதிர் கும்பிடும் அவர் ஆர்வம் பெருகுதல் அளவின்ருல்

தில்லைக்கூத்தன் தன்னை நோக்கி வரும் அடியார்களைக் கருணையுடன் நோக்கி "என்று வந்தாய்?" எனக் கேட்பது போல் தோற்றம் கிடைக்கின்றது. இந்த அனுபவத்தை வெளிப்படுத்துகிருர் அப்பர் ஒரு கவியால்,

திருச்சிற்றம்பலம்

ஒன்றியிருந்து நினைமின்கள் உந்தமக்கு ஊனமில்லை
கன்றிய காலனைக் காலால் கடிந்தான் அடியவற்காய்ச்
சென்று தொழுமின்கள் தில்லையுள் சிற்றம்பலத்து நட்டம்
என்று வந்தாயென்னும் எம்பெருமான்றன் திருக்குறிப்பே,

திருச்சிற்றம்பலம்

தில்லையிலிருந்து திருக்கழிப்பாலை சென்றவர் சிதம்பர நாதனை நினைந்து மீண்டும் திரும்பினர்.

திருச்சிற்றம்பலம்

பனைக்கை மும்மத வேழ முரித்தவன்
நினைப்பவர் மனம் கோயிலாக் கொண்டவன்
அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை
தினைத்தனைப் பொழுதும் மறந்துய்வனே.

திருச்சிற்றம்பலம்

என்று பாடி பேசாத நாளெல்லாம் பிறவா நாளே என்றெல்லாம் உருகினர்.

அம்மையின் அருட்பால் குடித்து சிவஞான சம்பந்தராக விளங்கிய பெரியாரைக் காண வேணுமென்று ஆவல் கொண்டார் திருநாவுக்கரசர். சீகாழி நோக்கிப் புறப்படும் போது தில்லைக்கூத்தனை தரிசித்து சிதம்பரம் திருவீதிகளிலே புரண்டு அங்கப் பிரதக்ஷிணம் செய்து புறப்பட்டார். அவர் சீர்காழி நோக்கி வருவதறிந்த ஞானசம்பந்தப் பெருமான் பெருவிருப்போடு அவரை எதிர்கொண்டழைக்க வந்தார். திருநாவுக்கரசர் ஞானசம்பந்தப் பெருமானின் திருவடிகளில் விழுந்து வணங்க அவரை சம்பந்தமூர்த்திகள் தடுத்து, 'அப்பரே' என்றழைக்க அவரும் 'அடியேன்' என்ருர்.

தொழுதணைவுற்றுண்ட அரசு அன்புருகத் தொண்டர் குழாத்திடையே சென்று
பழுதில் பெருங் காதலுடன் அடிபணியப் பணிந்தவர்தம் கரங்கள் பற்றி
எழுதரிய மலர்க்கையால் எடுத்திறைஞ்சி விடையின் மேல் வருவார்தம்மை
அழுது அழைத்துக் கொண்டவர்தாம் 'அப்பரே'என, அவரும் 'அடியேன்' என்ருர்

மருள் நீக்கியாராகப் பிறந்து, தருமசேனராக மாறி, இறைவனுல் திருநாவுக்கரசு என அழைக்கப்பட்ட பெருமானை ஞானசம்பந்த மூர்த்தி 'அப்பரே' என அழைக்க, அப்பெருமகனுர் அப்பர் சுவாமிகள் என்ற பெயராலேயே அழைக்கப் பெற்ருர்! சைவத்திற்கு ஒரு அப்பர் கிடைத்தார்.

திருச்சிற்றம்பலம்

(தொடரும்)

# அலங்கார நாயகன் 19

திருமதி ஆர். பார்வதிஅம்மாள் அவர்கள்,
தமிழாசிரியை. நாமக்கல்.

## வேதாகம சித்ர வேலாயுதன் துணை

அருணகிரியார் மனத்தைப் பார்த்து சொல்கிறார். ஒரு பூதர்க்கும் தெரியாத ஒரு இடம் உண்டு. நமக்கு இரவும் கூடாது, பகலும் கூடாது. இரவு பகல் அற்ற அந்த வெளிக்குப் போய் விடலாம் வா என்று அழைக்கிறார். போகிற வரைக்கும் துணை வேண்டும், போன பிறகும் துணை வேண்டும் கள்ளர் நம்மைக் கண்டு பயப்பட்டு நெருங்காமல் போக வேண்டுமென்றால் ஆயுதம் கையில் உடையவன் துணையாக வர வேண்டும். பெரிய பெரிய அசுரர்களை சங்காரம் செய்து வாகை சூடிக் கொண்டிருக்கும் தேவ சேனாதிபதியாகிய முருகனுடைய துணையைப் பெற்றுப் போகலாம் வா? சூரபன்மன் முதலிய அசுரர்களைச் சங்காரம் செய்வதற்குக் கருவியாய் இருந்த வேல் அவன் கையில் இருக்கிறது. நமக்குக் கவலை இல்லை. அவனுடைய பாதங்களையே சரணாகப் பற்றிக் கொண்டு போகலாம் வா என்கிறார்.

அவன் கையில் உள்ள வேல் எத்தகையது? நாம் பற்றிக் கொள்கிற அவன் பாதார விந்தம் எத்தகையது?

''வேதாகம சித்ர வேலாயு தன் வெட்சி
பூத்த தண்டைப்
பாதார விந்தம்''

ஆண்டவன்கையில்உள்ள வேல் ஞானமயமானது அது ஞானசக்தி. தாமசகுணங்களைப் போக்கி, அறியாமையைநீக்கி அறிவைக்கொடுப்பது அந்த ஞானவேல்;ஞானத்திற்கு உருவம் என்ன? இறைவனோடு தொடர்புடையஅறிவு எதுவோ அது

மெய்ஞானம். ஞானம் இருவகைப்படும். கல்வி கேள்வியினால் வருவதுஅபரஞானம்,உணர்வினால் அனுபவத்தினால் பெறுவது பரஞானம். அபரஞானத்தைப் பெற உதவியாக இருப்பவை நூல்கள். எல்லா நூல்களிலும் சிறந்தது வேதம் வேதம் இறைவன் அருளியது என்பர். அது எல்லோருக்கும் பொது வானது. வேதத்தோடு சார்த்திச் சொல்பவை ஆகமங்கள். அந்த அந்த சமயத்திற்கு ஏற்றபடி ஆகமங்கள் இருக்கின்றன. பொதுவான வேதத்தையும் சிறப்பான ஆகமங்களையும் சேர்த்து வேதாகமம் என்று சொல்வது வழக்கம். வேதம் இறைவனைப் பற்றியும் அறங்களைப் பற்றியும் சொல்கிறது. ஆகமங்கள் இறைவனை அடைவதற்குரிய செயல் முறையைச் சொல்கின்றன.

நமக்குக் கிடைக்கும் ஞானம் எப்படி வருகிறது? வேத மாக வருகிறது. ஆகமமாக வருகிறது. பிற நூல்களாக வரு கிறது. எம்பெருமான் திருக்கரத்திலுள்ள வேலை ஞானவேல் என்று பெரியவர்கள் சொன்னார்கள். அருணகிரிநாதர் அந்த ஞானத்திற்கு உருவம் கொடுத்து ஞானம் தரும் நூலாகிய வேதத்தையும் ஞானத்தையும் நினைத்து அந்த வேல் வேத வேல். ஆகம வேல் என்று சொல்கிறார். இறைவனோடு சம் பந்தப்பட்ட எல்லாவற்றையும் வேதம் என்று சொல்வது வழக்கம். சிவபிரான் ஏறிச்செல்லும் இடபம் வேதம், அவன் அணிகின்ற ஆடை வேதம், அவன் பாதுகை வேதம், அவன் சிலம்பு வேதம் என்பர் அருணகிரிநாதர் இந்த முறையை நினைத்து மற்றவர்கள் சொல்லாத புதுவகையில் முருகன் வேதாகமத்தையே வேலாக வைத்திருக்கிறான் என்கிறார். வியப்புக்குரிய பொருளாக இருக்கிறது அந்த வேல், சித்ரவேல் அது. உலகத்தைத் தனக்குள் அடக்கி ஆண்ட சூரபன்மனது உடலைத் துளைத்து அவனுக்குக் கவசம் போலிருந்த கிரௌஞ்ச கிரியையும் பொடிப்பொடியாக்கி பெரிய ஆச்சரியமான காரி யங்களைச் செய்தது அந்த வேல் அஞ்ஞானத்தைப் போக்க உதவும் ஞானமே வடிவான வேதாகமத்தை வேலாக வைத் திருக்கிறான் முருகன், அவனை நமக்குத் துணையாகக் கொள்ள வேண்டும். வேல் நமக்குத் துணையாக வேண்டும் என்றால்

அந்த வேலை உடைய வேலாயுதன் தாளை நாம் பற்றிக் கொள்ள வேண்டும். அவன் காலைப் பற்றினால் வேலைவிடுத்து நம்மைக் காப்பாற்றுவான். அவனது திருத்தாள்கள் எத்தகையவை?

அநாதிகாலம் தொட்டுப் பக்தர்கள் எப்போதும் அருச்சனை செய்து வரும் பாதம் அது. அவர்கள் தூவிய மலர்கள் அதன் பால் இருக்கின்றன. வெட்சிப்பூ நிரம்பக் குவிந்திருக்கிறது. அவன் பாதத்திலேயே பூத்த மாதிரியாக அது மலர்ச்சியோடு இருக்கிறது. அவ்வளவு தன்மையுடையது அவன் தாள். மலரை அணிந்ததோடு தண்டையையும் அணிந்த திருவடி அது. அரவிந்தம் போன்றது.

''வெட்சி பூத்த தண்டைப்
பாதார விந்தம் அரணாக''

இறைவன் தண்டை அணிந்திருப்பதால் அவன் விரும்பும் போது ''இறைவன் வருகிறான் இறைவன் வருகிறான்'' என்று பக்தர்களுக்கு அது ஒலி செய்து காட்டுகிறது. அந்தத் திருவடித் தாமரைகளை நமக்கு அரணாகப் பற்றிக் கொண்டு போவோம் வா மனமே என்கிறார் அருணகிரியார்.

நாம் பற்றிக் கொள்வது கால் நமக்கு அஞ்சல் என்று சொல்வது கை. அவனது திருவடியைப் பற்றிக் கொண்டு கண்ணீர் விட்டு நீயே சரணம் என்று கதறினால் அவன் கை அஞ்சல் என்று சொல்லும். நாம் பாதுகாப்பான இடத்தை அடையலாம்.

''அல்லும் பகலும் இல்லாச்
சூதானது அற்ற வெளிக்கே ஒளித்துச்
சும்மா இருக்கப் போதாய்''

திருமுருகாற்றுப் படையில் நக்கீரர் சொல்கிறார். புலவன் ஒருவன் வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். முருகனைத் தேடி, வீடு, வாசல், மாடு, மனைவி, எல்லாவற்றின் மேலும் உள்ள பற்றை விட்டு விட்டுக் கிளம்பி விட்டான் வழியில் நக்கீரரரைக் கண்டு ஆண்டவன் முருகன் எங்கே இருக்கிறான் என்று கேட்கிறான்.

முருகனைத் தேட ஆரம்பித்து விட்டாயா? வீட்டை விட்டுக் கிளம்பி விட்டாயா? மெத்த மகிழ்ச்சி அப்படியானால் இனி ஒரு கணம் கூடத் தாமதிக்காதே அவன் அருளை இப்போதே நீ பெறுவாய் உடனே புறப்படு என்கிறார்.

''எய்யா நல்இசைச் செவ்வேல் சேஎய்
சேவடி படரும் செம்மல் உள்ளமொடு
நலம்புரிக் கொள்கைப் புலம்விரிந்து உறையும்
செலவுநீ நயந்தனை ஆயின் பலவுடன்
நன்னர் நெஞ்சத்து இன்நசை வாய்ப்ப (நசை—விருப்பம்)
இன்னே பெறுதிநீ முன்னிய வினையே''

நீ பிறந்த குலம் என்ன? செய்து வந்த தொழில் என்ன? என்பன போன்ற கேள்விகளை அவர் கேட்கவில்லை. உடனே புறப்படு இன்னே பெறுதி நீ என்று சொல்கிறார் இப்படித்தான் ஞானிகள் இறைவனது அருளினால் ஞானத்தைப் பெற்ற மாத்திரத்தில் அவனுடைய திருவடியில் சேர்ந்து எல்லையில்லா இன்ப நலன்களைத் துய்க்க ஒரு கணமும் தாமதமின்றி ஓடுகிறார்கள். அவர்களது உடல் நம்மிடையே இருந்தாலும் மனத்தால் அவர்கள் நம்மை விட்டு வெகு தூரம் ஓடி விடுகிறார்கள் அப்படி ஓடிவிட வேண்டுமென்ற உள்ளம் படைத்த மக்களுக்குச் சொல்வதை தம் மனத்துக்குச் சொல்கிறார் அருணகிரியார்.

''அல்லும் பகலும் இல்லாச்
சூதானதற்ற வெளிக்கே—போதாய்''

அல்லும் பகலும் இல்லாச் சூதானது அற்றவெளி என்பது கால எல்லைக்குள், பூத எல்லைக்குள், மூச்சுக் காற்றுக்குள் அடங்கி வாழ்கின்ற நாம் காலனுக்கு பயப்பட்டே வாழ வேண்டும். இந்த எல்லைகளுக்கு அப்பாற்பட்ட இடத்தில் இரவும் பகலும் அற்ற வெளியில் இதாகாசத்தில் இருக்கின்ற இறைவனோடு நாம் போய் சேர்ந்து விடலாம் அங்கே போய் ஒளிந்துக் கொண்டால் யாருக்கும் தெரியாது

''தெரியாது ஒரு பூதர்க்குமே'' ஒருயிருக்கும் தெரியாமல் யாரும் காண முடியாத நிலைமையில் அல்லும் பகலும் அற்ற

வெளியாய் இருக்கிற சூது அந்த நிலைக்குப் போதாய் என்று சொல்கிறார். அங்கே போவதற்கும் வேலாயுதன் துணையாக இருப்பான் அங்கே போன பிறகும் துணையாக எப்பொழுதும் இருப்பான். "சும்மா இருக்கப் போதாய்" சும்மா இருப்பது என்பது என்ன? செயல் அடங்கி, பேச்சு அடங்கி, மனம் அடங்கி, இருப்பதையே சும்மா இருத்தல் என்பர். ஞான மாகிய செல்வம் கிடைத்து விட்டால் அதைப் பாதுகாத்து அவனோடு இயைந்து சும்மா இருக்க வேண்டாமா? சும்மா இருத்தல்தான் அநுபவம்

மனமே வா சும்மா இருக்கலாம் என்று அருணகிரியார் தம் மனத்தைப் பார்த்துச் சொன்னதுதான் இது.

> "தருங்கோள் மனத்தை விடுங்கோள் வெகுளியைத்
> தானம் என்றும் இடுங்கோள்"

என்று நேரே நம்மைப் பார்த்து சென்ற பாட்டில் சொன்ன வர் இப்பொழுதும் தம் மனத்தைப் பார்த்துச் சொல்வது போலச் சொல்வது போலச் சொல்கிறார். இரண்டும் நமக்காகச் செய்த உபதேசமே.

> "வேதா கமசித்ர வேலா
> யுதன்வெட்சி பூத்ததண்டைப்
> பாதார விந்தம் அரணாக
> அல்லும் பகலும் இல்லாச்
> சூதானது அற்ற வெளிக்கே
> ஒளித்துச் சும்மா இருக்கப்
> போதாய் இனிமன மேதெரி
> யாதுஒரு பூதர்க்குமே"

[தொடரும்]

# எத்தனை கண்கள் வேண்டும்?

திரு. அரங்க. முத்துமணி அவர்கள்:
உதவிப் பதிவாளர்
அரியலூர்–621704

———

எண்சாண் உடம்பிற்கு சிரசே பிரதானம், அந்த சிரசிற்கும் பிரதானமாக—வழிகாட்டியாக இருப்பவை கண்களேயாம் ஐம்பொறிகளும் ஒரு நிலைப்படும் பொழுது கண்ணின் வழியாக நிற்றலைக் காணலாம். "ஐந்து பேரறிவும் கண்களே கொள்ள........." என்பார் சேக்கிழார் பெருமான்,

அப்படிப்பட்ட கண்ணின் பயனையும், திருஞான சம்பந்தர் வரலாற்றில் தெளிவுறக் கூறுகிறார் "மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல், **கண்ணினால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்**" என்று கூறுமாற்றான், இறைவனுடைய திருக்கோலக் காட்சியைக் கண்டு களிக்க வேண்டுமென்பது தெள்ளிதிற் புலனாகின்றது.

மனிதனுக்கும்ஏனைய உயிரினங்கட்கும்இரண்டுகண்களே இருக்கின்றன. ஆனால் ஏனைய உயிரினங்களைவிட, மனிதனுக்குச் சிறப்பேற்படுவதற்குக் காரணம், சிந்திப்பதும், செயலாற்றுவதுமேதான். அதிலும் இறைவனுடைய பேரழைக் கண்டுகளிக்க, இரண்டு கண்கள் போதாது, எண்ணிலாதன வேண்டும் என்பர் அடியார்.

வண்ணத் தமிழ் பாடி, வாக்கெல்லாம் சந்தத் தமிழைச் சிந்திய வள்ளல் அருணகிரிப் பெருமான், திருச்செங்கோட்டுக்குச் செல்கிறார். முத்தமிழ் வள்ளலாகிய முருகப் பெருமானைக் கண்டு மொய்ந்திடும் அன்பினாலே, உருகி, உளங்கனிந்து பாடுகிறார்.

''மாலோன் மருகனை மன்றுடி மைந்தனை வானவர்க்கு
மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை மேதினியிற்
சேலார் வயற்பொழிற் செங்கோடனைச் சென்று கண்டுதொழ
நாலா யிரங்கண் படைத்திலனே யந்த நான்முகனே!''
—(கந்தரலங்காரம்–90)

முருகப் பெருமானுடைய அழகைக் காண, கண்டுகளிக்க, அன்பின் முதிர்ச்சியால் வழிபட, ''நாலாயிரங் கண்களைப் படைக்கவில்லையே அந்த நான்முகன், இரண்டு கண்களால் எப்படிக் காண்பேன் என்று ஏங்குகிறார் அருணகிரிப் பெருமான்

மேலும் சுந்தரமூர்த்தி சுவாமிகளின் திருமணத்தைக் காண்போம். ''மன்னவர் திருவும் தங்கள் வைதிகத் திருவும் பொங்க'', நம்பியாருரர், புத்தூர் சடங்கவிச் சிவாசாரியார் இல்லம் நோக்கி வருகிறார்: மாப்பிள்ளை கோலம்; எனினும், மனதில் சிவனடிகளையே, சிந்தித்து, திருநீறுபூசி, குதிரையின் மீது வந்து கொண்டிருக்கிறார். அந்த அழகைக் காண, ''கண்கள் எண்ணிலாத வேண்டும் காளையைக் காண'' என்றார்களாம்.

இன்னும் கம்பனில் ஒரு காட்சியைக் காண்போம், சக்கரவர்த்தித் திருமகனை ஸ்ரீ இராமச்சந்திர மூர்த்தி, ஜனகனுடைய அரண்மனையில்வில்லை வளைத்தார். வில்லை எடுத்தது தான் தெரியும். ஒடிந்ததைக் கேட்டனர் எங்கும் மகிழ்ச்சிப் பிரவாகம், இராமனுடைய அழகைப் பார்த்தனர். அந்த அழகைக் காண்பதற்கு சீதாப்பிராட்டிக்கு ஆயிரம் கண்கள் வேண்டுமென்றனர் சிலர்.

''நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்'' இது கம்பர் வாக்கு. விடுவார்களா சீதையின் கட்சியினர், சீதாப்பிராட்டியினைக் காணும் ஒவ்வொரு முறையும் இராமபிரானுக்கு ஆயிரம் கண்கள் வேண்டும். என்றார்களாம் ''கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்னதேயாம்'' என்பதில் ''காணுந்தோறும்'' என்ற நயம் நோக்கத் தக்கது, இன்னுஞ் சில்லோர் ''இளைய பெருமாளின் ஏற்றத்

தைக் காணீர்!'' என்றார்களாம். வேறு சிலர், ''வீண்விவாதம் ஏன்? இவர்களை இந்த அழைத்து வந்த முனிவரை வணங்குமின்'' என்றார்களாம். இவ்வளவும், கண் பெற்றதனால் அடைந்த பாக்கியமன்றோ! இனி, முழு பாடலையும் பார்ப்போம்.

''நம்பியைக் காணநங்கைக் காயிரம் நயனம் வேண்டும்
கொம்பினைக் காணுந்தோறும் குரிசிற்கும் அன்னதே யாம்
தம்பியைக் காண்மின் என்பார் தவமுடைத் துலகம் என்பார்
இம்பர்இந் நகரில் தந்த இறைவனை இறைஞ்சும் என்பார்''
(கம்பராமாயணம், கார்முகப்படலம்)

எனவே, கண்களாற் பெற்ற பயன், நல்ல காட்சிகளைக் காண வேண்டும்–அதிலும் இறைவனுடைய திருக்கோலக் காட்சியைக் காணுதலே சிறப்புடைத் தாம் என்பது பெறப்படும் அதற்கு இரண்டு கண்கள் போதா–எண்ணிலாதன வேண்டும் அறிவுக் கண்கள்-என்று பிரார்த்திப்போம்.

''கண்காள் காண்மின் களோ – கடல்
நஞ்சுண்ட கண்டன்றன்னை
எண்டோள் வீசி நின்றாடும் பிரான் றன்னைக்
கண்காள் காண் மின்களோ''
- திருநாவுக்கரசர்

சிவ சிவ]

# இறைவனே நமது உண்மையான அம்மையப்பன்

"சிவநெறித்தவ மணி"
**செல்வி: த. பத்மாவதி அவர்கள்,**
மதுரை ஆதீன சிஷ்யை,
54, ஜடாமுனி கோவில் மேலச்சந்து, மதுரை.

உலகில் பிறந்த மக்கள் அனைவரையும் தாய்க்குலமே பெற்றெடுத்திருக்கிறது. ஆனால் யாராவது நம்மைப் பார்த்து நீ யார் என்று கேட்டால் ஒவ்வொருவரும் தந்தையார் பெயரையே சொல்லி இன்னார் குழந்தை என்று சொல்கிறோம். நம்மை 10 மாதம் சுமந்தது தாய், பாலூட்டித் தாலாட்டி வளர்த்ததுதாய்; நமக்காகப் பத்தியமிருந்து மருந்துண்டது தாய் அப்படியிருக்க, தாய் பெயரைச் சொல்லி இன்னார் குழந்தை என்று சொல்லாமல் தந்தை பெயரைச் சொல்வது நன்றி கெட்ட செயலா? இல்லை. காரணம் வருமாறு.

ஒருவர், தனக்குச் சொந்தமான விளைநிலத்தில் வித்திட்டார். பயிர் விளைந்து வந்தது, பயிர் யாருக்குச் சொந்தம்? வயலுக்கா அல்லது வயலுக்குச் சொந்தக்காரருக்கா? வயலை உடையவருக்கே சொந்தமாகும். தாய், விளைநிலம் போல, தந்தை விளைநிலத்தை உடையவர் போல இதே உவமையை வள்ளுவரும் ஒரு இடத்தில் கையாண்டிருக்கிறார்.

செல்லான் கிழவன் இருப்பின் நிலம் புலந்து
இல்லாளின் ஊடி விடும்.

நிலத்துக்கு உரியவன், நாடோறும் தவறாது சென்று பயிருக்கு வேண்டுவன செய்யாது சோம்பியிருப்பானானால். அந்நிலம் அவனை வெறுத்து அவன் மனையாளைப்போலப் பிணங்கி விடும் என்பது அதன் பொருள்.

தாயானவள் தந்தையாருடைய சொந்த நிலம் போன்றவள். ஆண் குழந்தைக்குரிய வித்தினையோ, பெண் குழந்தைக்

குரிய வித்தினையோ கொடுத்தவர் தந்தையாரே. நிலத்துக்குச் சொந்தக்காரர் யாரோ அவருக்குத்தான் அந்த நிலத்தில் விளைந்த பொருள் சொந்தமாகுமேயன்றி அந்த நிலத்துக்குச் சொந்தமாக முடியாதல்லவா? தாயார்தான் உன்னுடைய தந்தையார் இன்னார்தான் என்று சுட்டிக்காட்ட வேண்டும். ஆகவே கணவனரது உடைமையான, மனையாளிடத்தில் உற்பத்தியான குழந்தைகள் தந்தையின் சொந்தக் குழந்தைகளாகின்றன. இதன் காரணமாகவேதான், ஒவ்வொருவரும், தகப்பனருடைய பெயரைச் சொல்லி அவருடைய குழந்தை என்று சொல்லி வருகிறோம்

கணவனர் நினைத்தபடி ஆண் வித்தினையோ. பெண் வித்தினையோ, உண்டு பண்ணிக் கொள்ள முடிவதில்லை அதனால் தான் எத்தனையோ வசதி படைத்த மன்னர்களும் டாக்டர்களும், தலைவர்களும் கூட, தாங்கள்விரும்பியபடி குழந்தைகளைப் பெற்றெடுத்துக் கொள்ள முடிவதில்லை ஆண் குழந்தை இல்லையே என்றும், பெண் குழந்தை இல்லையே என்றும், ஒரு குழந்தையும் இல்லையே என்றும்ஏங்கும் பெற்றோர்களே இதற்குச் சான்றுவார்கள். அதற்கு மூலகாரணம். ஒவ்வொரு கணவனரிடத்திலும், ஆணுக்குரிய அல்லது பெண்ணுக்குரிய பாரமில்லாத உள்ளுடம்பு (சூக்குமசரீரம், யாதனு சரீரம், ஆவி உடம்பு, பிராணமயகோசம் அல்லது சொப்பன உடம்பு)க்கான வித்தினைக் கடவுளே கொடுக்க வேண்டியதிருக்கிறது வித்தினையே உண்டாக்குகின்ற ஆற்றல் பெற்ற இறைவனை மாணிக்கவாசக சுவாமிகள் "விச்சதின்றியே விளைவு செய்குவாய்" என்று விதந்து கூறினர்.

கடவுள். பாரமில்லாத ஆவி உடம்பிற்கான ஆண் வித்தினையோ, பெண் வித்தினையோ நாற்றங்கால் போன்ற கணவனுடைய உடம்பில் செலுத்தினல் அங்கு அது பாரமுள்ள உடலுக்குரிய சதையைப் பெற்றுக் கொள்ளுகிறது. பின்னர் அது வயல் போன்ற மனையாளிடத்தில் சென்று இரண்டு உடம்பும் (ஆவி உடம்பும், சதை உடம்பும், அதாவது பிராணமய கோசமும், அன்னமய கோசமும் அல்லது சூக்கும சரீரமும்

ஸ்தூல சரீரமும்) சேர்ந்து வளர்ந்து பூமியில் பிறக்கிறது. நாற்றங்காலாகிய கணவனும் வயலாகிய மனைவியும் கடவுளுடைய உடைமைப் பொருள்கள் ஆனதினாலும். குழந்தைக்குரிய மூலவித்தினை அருளியவன் கடவுள் ஆனதினாலும் அருளாளர்கள் எல்லோரும் இறைவனே, மக்கள் எல்லோருக்கும் நிரந்தரமான அம்மையப்பன் என்று கண்டு கூறினார்கள்.

பெற்றோர் என்ற பெயர் ஏன் வந்தது? பெறுதல் என்றால் உடையவர் ஒருவரிடமிருந்து இல்லாதவர் ஒருவர், ஒரு பொருளைப் பெறுதல் என்றுதான் பொருள் உடையவராகிய இறைவனிடமிருந்து குழந்தைகளைப் பெற்றோர்களைப், பெற்றோர் என்கிறோம். குழந்தைப்பேறு அற்றவர்களைக் கணவன் மனைவி என்றுதான் சொல்வோமே தவிர பெற்றோர் என்றோ, தந்தை, தாய் என்றோ சொல்ல மாட்டோமல்லவா?

சதையுடம்பு கொடுக்கக் காரணமாயிருந்த இப்பூவுலகத் தாயும். தந்தையும் கனத்த சட்டையைத் தைத்துக் கொடுத்த தையற்காரர்கள் ஆகிறார்கள் (Tailors) ஒரு குடும்பத்தில் பிறந்த பல சகோதரர்கள் வெவ்வேறு தையற்காரர்களிடம் சட்டைத் தைத்துக் கொண்டாலும், அவர்களுடைய சகோதரத்துவம் எவ்வகையிலும் மாறுபடாது. அதுபோல உலகில் பிறந்த அனைவருக்கும் கனத்த சட்டை கொடுத்த பெற்றோர்கள் பலராயிருந்தாலும், உண்மையான பாரமில்லாத சூக்குமஉடல் கொடுத்தவன் இறைவனேயாதலால் உலக மக்கள் அனைவரும் சகோதர சகோதரிகள் ஆகிறோம். அதனாலேயே அருளாளர்கள் யாவரும், அப்பன் நீ, அம்மை நீ என்றும், தந்தை தாய் தம்பிரான் தனக்கு அஃதிலான் என்றும் அம்மையே அப்பா என்றும், பரமண்டலத்திலிருக்கிற எங்கள் பிதாவே என்றும் ஒன்று போல் பாடியிருக்கிறார்கள். இந்த ஞானம் மக்களிடையே பரவினாலன்றி தீண்டாமை ஒழிய முடியாது.

உலக மக்கள் அனைவரும் இறைவனுடைய குழந்தைகளாயிருக்க இப்பூவுலக பெற்றோர். சிறிது காலம் வளர்க்கின்ற தாதிகளின் நிலையிலே இருந்தும், மயக்கத்தினால் தங்கள்

குழந்தை என்று மனதில் கருதி அவை இறந்தால் அல்லல்படு வதை நினைந்து வருந்தித் திருமூலர் கீழ்வரும் பாடலை அருளி யுள்ளார்

குயிற் குஞ்சு முட்டையைக் காக்கைதன் கூட்டிட்டால்
அயர்ப்பின்றி காக்கை வளர்க்கின்ற அதுபோல்
ஏக்கில்லை போக்கில்லை ஏனென்பதில்லை
மயக்கத்தால் ஆக்கை வளர்க்கின்ற வாறே.

குயிலும் கருப்பு, காக்கையும் கருப்பு. குயில் முட்டை யிடுமே தவிர அதற்கு கூடுகட்டவும் தெரியாது அடை காக்கவும் தெரியாது. தன் முட்டையைக் காக்கையின் கூட் டில் இட்டு விட்டுப் பறந்துவிடும். காக்கை, தன் முட்டை என்று கருதி அடைகாத்துக் குஞ்சானவுடன் இரை தேடிக் கொணர்ந்து ஊட்டி வளர்க்கும். குயில் குஞ்சு கொஞ்சம் பெரிதாகிப் பறக்கும் பருவம் வந்தவுடன், தாய்க்குயில் வட்ட மிட அதனோடு பறந்து செல்லும். அதுபோல இறைவன் தன் னுடைய குழந்தைகளைப் பெற்று வளர்த்துத் தரும்படி பெற் றோரைப் பயன்படுத்திக் கொள்கிறன். மயக்கத்தால் இறை வனுடைய குழந்தைகளைத் தம்முடைய குழந்தை என்று கருதி மாந்தர் அல்லற்படுகிறார்கள்.

எனவே இறைவனே நமது உண்மையான அம்மையப் பன். நாம் அனைவரும் எங்கு பிறந்திருந்தாலும், என்னபாஷை பேசினாலும் சகோதர சகோதரிகளேயாவோம்

———

சிவ சிவ]

# "ஞானசம்பந்தப் பெருமான் அருளிய தமிழ் மொழியின்" சிறப்புக்கள்

ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் அவர்கள்,
இளவரசு, மதுரை ஆதீனம்.

"சைவசமயம் தழைக்கவும், தமிழ்மொழி சிறக்கவும் சமுதாயம் அறநெறியில்நின்று பண்பாட்டோடும், மனிதத்தன்மையோடும் வாழ்ந்து வருவதற்காகவுமே, ஞானசம்பந்தப் பெருமானுர் இப்பூவுலகில் தோன்றினுர்".

சம்பந்தப் பெருமான் தோன்றியதற்கான இருபத்து நான்கு காரணங்களை சேக்கிழார் கூறினுர். அவற்றில்,

*"அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்*
*வழக்கின் துறை வெல்ல"*

என்பதும் ஒன்று.

தமிழ் மொழியின் சிறப்பை நிலைநிறுத்தும் பொருட்டே, ஞானசம்பந்தர் தோன்றினுர் என்று, சேக்கிழார் உறுதியாகக் கூறுவதற்கு, சம்பந்தர் தேவாரத்தில் அகச்சான்றுகள் உள்ளனவா? என்பதை நாம் பார்க்கவேண்டும்.

சம்பந்தப்பெருமான் அருளிய, தேவாரப் பதிகங்கள் 384 கிடைத்துள்ளன. அவற்றில் அடங்கிய திருப்பாட்டுக்கள் 3800க்கும் மேற்பட்டவை! திருப்பதிகங்களில் உள்ள, கடைசிப்பாட்டுத் திருக்கடைக் காப்பு என்று சொல்லப்பெறும்.

இத்திருக்கடைக்காப்பில், தாம் பாடிய தலத்தின் மீது அமைந்துள்ள பாடல்களை, விரும்பிப் பாடுவோர் அடைகின்ற பேறு பற்றிக் குறிப்பிடுகிருர். மேலும், அவற்றில் தம்குலம் குடிபற்றியும், தனதுபுகழ், சிறப்புக்கள் பற்றியும் எடுத்துரைக்கிருர். தமது பாடல்களை "தமிழ்" என்றும் "தமிழ்மாலை" என்றும் கூறுகிருர். இவற்றிற்கும் மேலாக, தமிழ்மொழியின்

தொன்மை, அதன் உயர்வு, அதன் இறைத்தன்மை ஆகியவற்றையும் குறிப்பிடுகின்றார்.

அவற்றின் பட்டியலைக் கீழே காண்போம்.

சம்பந்தப்பெருமான் தம் குலம் பற்றி அந்தணர் என்றும் தம்குடி பற்றி 'கவுணியன்'' என்றும், தம்மை ''மறைஞான சம்பந்தன், திருமாமறை ஞானசம்பந்தன், அருமறை ஞான சம்பந்தன், நான்மறை ஞானசம்பந்தன், வித்தக மறைமலி சம்பந்தன் செழுமறைகள் பயிலும் நாவலன், அருமறைவல்ல மறையோன், ஆய்ந்த மறை ஞானசம்பந்தன், நல்ல மறையோன் இப்படித் தம்மை மறைகள், வடமொழி வேதங்களோடு பிணைத்துக் கூறுகின்றார்

அடுத்து, அவர் தம்மைத் தமிழ் மொழியோடு பிணைத்துக் கூறும் பட்டியலைக் காண்போம்.

தம்மைத் தமிழ் ஞானசம்பந்தன் என்றும், திருஞான சம்பந்தன் செந்தமிழ், சம்பந்தன் ஒண்தமிழ், ஞானசம்பந்தன் செந்தமிழ், ஒலிகொள் மறைஞானசம்பந்தன் செந்தமிழ், செந்தமிழ் ஞானசம்பந்தன், சம்பந்தன் தமிழ், சம்பந்தன் நலங்கொள் தமிழ் தமிழ் விரகன், நற்றமிழ் ஞான சம்பந்தன், தலைமகனாகி நிறைதமிழ் ஞானசம்பந்தன், நற்றமிழுக்கு இன்துணைவன் ஞானசம்பந்தன், தன்னொளிமிக்குயர்ந்த தமிழ் ஞானசம்பந்தன், ஞானசம்பந்தன் ஞானத்தமிழ், ஞானசம்பந்தன் நற்றமிழ், தமிழ்க்கிழமை ஞானன், மறை ஞானசம்பந்தன் தமிழ், ஞாலம் மல்கு தமிழ் ஞானசம்பந்தன், ஞானசம்பந்தன் சீர் இன்புறும் தமிழ், முத்தமிழ் ஞானசம்பந்தன், தமிழ்கெழு விரகினன், நல்லவாய இன்தமிழ் நவிலும் ஞானசம்பந்தன், சந்தமார் தமிழ்கேட்ட ஞானசம்பந்தன் செந்தமிழால் மிகு ஞான சம்பந்தன், முத்தமிழ் விரகன், இவ்வாறு அவர் தமிழுக்கு உயர்வுதந்து, தம்மோடு தமிழைபிணைத்துக் கூறியிருக்கின்றார்.

அடுத்து, அவர் தமிழ்மொழியைப் பாராட்டிக் கூறுகின்ற பட்டியலைப் பார்ப்போம்.

''ஊறும் இன்தமிழால் உயர்ந்தோர் உறைதில்லை' ''மாக உடையோன் அடியையே உடையதமிழ்'' சங்கமலி செந்

தமிழ், பாரின் மலிகின்ற புகழ்கின்ற தமிழ், பண்ணுலாம் அருந் தமிழ், நிலையுடைய அருந்தமிழ், சொற்றமிழ் நல்லதமிழ், உற்ற தமிழ், தண்தமிழ், செந்தமிழ், நற்றமிழ், பாவார் தமிழ், அருந் தமிழ், வண்தமிழ், சந்துலாம் (சந்தன மணமுள்ள) தமிழ், இவ்வாறு தமிழ் மொழியைப் பல்வேறு சொற்களால் பாராட்டிக் கூறியுள்ளார்.

மேலேகண்ட, அவரது அகச்சான்றுகள் மூலம் சம்பந்தப் பெருமானது தமிழ்ப் பற்று நமக்கு நன்கு புலனாகிறதன்றோ?

நம்பியாரூராம் சுந்தரமூர்த்தி நாயனாரும் தம் தேவாரத்தில், சம்பந்தரைப் பற்றிக் கூறும்போது,

''*நாளும் இன்னிசையால் தமிழ்பரப்பும் ஞானசம்பந்தனுக்கு*''
''*நற்றமிழ் வல்ல ஞானசம் பந்தன்*''
''*நாவின் மிசை அரையன்தனெடு இத்திருவாக் குகளால்*''

என்று குறிப்பிடுகிறார் சுந்தரரின் இத்திருவாக்குகளால், தாம் வாழ்ந்த ஒவ்வொருநாளும் சம்பந்தப் பெருமானார் தமிழையே பரப்பினர், அவர் நல்ல தமிழை வளர்ப்பதில் வல்லவர் என்ற உண்மைகளை நாம் உணர முடிகிறதல்லவா?

ஞானசம்பந்தப் பெருமான் பாடிய ஒவ்வொரு தமிழ்ப் பாடலும் உள்ளுணர்வு நடையினைப் (Inspired Style) பெற்றவையாக விளங்குகின்றன. தவிரவும், கவிதையின் அமைப்பு வடிவமும், சொற்களின் ஆட்சியும், எதுகை, மோனையும் அடைமொழி வழங்குகையும், அவரின் பாடல்களுக்குச் சிறப்பை ஊட்டுகின்றன.

கவிதையின் பொது இயல்புகளைப் பற்றி விரிவாகக்கூறும் சூப்பர்கிராம்பி என்னும் பேரறிஞர், தமது கவிதைக்கொள்கை (The theory of Poetry) என்னும் நூலில் ''ஒவ்வொரு கவிதையும், சிறிதாயினும், பெரிதாயினும் நாம் அதனை மதிக்கப் பெறுவதாயின் அது நம் உள்ளுணர்வைத் தூண்டுவதாக இருத்தல்வேண்டும்'' என்பார். அவரது மூலவாசகம் இது தான். "Every poem big or little if it is to have the slightest value for us" must have been, if we say

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

[சிவ சிவ

# ஞானசம்பந்தரும் நற்றமிழும்

தத்புருஷ தேவநாம
திரு, சு இராமலிங்கம் அவர்கள்,
கணித ஜோதிடர், ஸ்ரீ மாணிக்கவாசகர் இல்லம்
சீகம்பட்டி, K. புதுப்பட்டி P.o
இலாலாப்பேட்டை வழி, திருச்சி ஜில்லா

---

திருச்சிற்றம்பலம்

பறப்பைப்படுத் தெங்கும் பசுவேட்டெரி யோம்பும்
சிறப்பர் வாழ்தில்லைச் சிற்றம்பல மேய
பிறப்பில் பெருமானைப் பின்தாழ் சடையானை
மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே. (கோயில்)

திருச்சிற்றம்பலம்

முதல்த் திருப்பாசுரத்திலே முதல்வன் திருப்பாதத்தைப் பற்றினவரைப் பாவம் பற்ருது என்று அருளியுள்ளார் ஞால முய்ய வந்த ஞானசம்பந்தர். பாதத்தை பற்றுவது என்ருல் என்ன. எப்படி என்றெல்லாம் நமக்குள்ளே வினு எழும். அதற்கு விடை பிறப்பில்லாதவனும் தலைவனும், பின்பக்கம் தாழ்ந்த சடையையும் உடைய பெருமானை மறவாமலிருப்ப தாகும் என்று இந்தத் திருப்பாசுரத்திலே அருளுகிருர். முதல்த்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

''inspired'' ஞானசம்பந்தப்பெருமானின் பெருங்கவிதை ஒவ்வொன்றும், நமது உள்ளுணர்வைத் தூண்டி இன்புறச் செய்யும் பேராற்றல் படைத்தது அன்ருே?

அவ்வாறு, நமது உள்ளத்தில், இறை உணர்வை ஊட்டி வளர்க்கும், நம் ஞானசம்பந்தப்பெருமானின் தமிழ் வேதத்தை ஓதி உணர்ந்து, எம்பெருமானின் பேரருளைப் பெற்று பேரின்பப் பெரு வாழ்வு வாழ்வோமாக!

திருப்பாசுரத்திலே திருவடியைக் கூறி இந்தத் திருப்பாசுரத்திலே திருமுடியைக் கூறுகிறார். சிவபெருமானைத் தவிர வேறு எந்த தெய்வங்களுக்கும் சடையைப் பற்றிய வார்த்தையே இருக்காது. சிறப்பாக சடை இருப்பதனாலேயே மற்றெல்லாத் தெய்வங்களுக்கும் இவரே தலைவரென்பதை தெற்றெனத் தெளியலாம். ராஜா ஒருவருக்குத்தான் சிறப்பாக கிரீடம் இருக்கும். ஏனையோருக்கு அப்படி இருக்காது சிவபெருமானுடைய சடை அளவிலாற்றலும் அளவில் கருணையும் உடையது இதனாலேதான், மாணிக்கவாசகசுவாமிகள் "சடையவனே தளர்ந்தேன் எம்பிரான் என்னைத் தாங்கிக் கொள்ளே" என வேண்டுகிறார்.

மேலும் சடையிலிருக்கும் பொருள்களால் ஆற்றலும் கருணையும் நன்கு தெளியப்படும், திருச்சடையில் பலபொருள்களுள்ளன அவற்றில் முக்கியமாக கங்கையும், சந்திரனும் விளங்குகின்றார்கள். கங்கையினால் அளவிலாற்றலும், சந்திரனால் அளவில் கருணையும் விளங்கும். எப்படியென்னில், கங்கை சலமுகமுடையவளாய் தரணியெல்லாம் பிலமுகத்தே புகுத்த வந்த கங்கையை புல்லினது நுனியில் நிற்கும் பனித்துளி போல் சடையில் தரித்தார் இதனால் அளவிலாற்றலும், அளவில் குற்றம் புரிந்த சந்திரனை சடையில் தரித்ததனால் அளவில் கருணையும் புலப்படும். சிவபெருமானுடைய ஆற்றலை பிரமேந்திராதி தேவர்களாலும் அறிய முடியாது கங்கையைத் தரித்தது அவராற்றலுக்கு மிகச் சிறிய காரியமே அண்டங்களையெல்லாம் மாலையாக அணியும் பெருமான் கங்கையைத் தரித்தது வியப்பாகாது. என்கிறார் நமது குமரகுருபர சுவாமிகள்.

பெரு வெள்ளப்ப கிரண்டந் தரித்திடு நீபெயர்த்துமலே
பொரு வெள்ளப் புனற்கங்கை தரித்தது மோர் புகழாமே.

என்பதால் விளங்கும், இனி நம்முடைய ஆற்றலை கவனிப்பது மிக அவசியமாகும். உயிர்களாகிய நமக்கு மூன்று காலமுண்டு அது. கேவலம், சகலம், சுத்தம், என்பனவாகும். நாம் அறியாமையினால் சமர்த்தர்களென்று எண்ணிக்கொண்டிருக்கிறோம்

கேவல நிலையில் நாம் எவ்வளவு கெட்டிக்காரர்களாக இருந்தோம் என்பதை தாயுமான சுவாமிகள் கூறுகிறார். இருள் நிறைந்த அறைக்குள்ளே, கண்ணில்லாத அறிவில்லாத சிறு குழவியைப் போல். ஆணவமல மறைப்பிலே அறிவின்றி கட்டுப்பட்டு யாதொரு உணர்ச்சியுமில்லாமல் கிடந்தோம். அக்கருத்துள்ள பாடல்=''காரிட்ட ஆணவக் கருவறையில் அறிவற்ற கண்ணிலாக் குழவியைப் போல், கட்டுண்டிருந்த வெமை வெளியில்விட்டு'' என்பதால் தெளியலாம் இவ்வளவு கேவலமான நிலையில் கிடந்த நமக்கு எல்லையில்லாத கருணையுடைய பெருமான் தங்குவதற்கு நல்ல வீடாகிய உடலைக் கொடுத்து, விளக்காகிய அந்தக் கரணங்களைக் கொடுத்துவசிப்பதற்கு புவனங்களைக் கொடுத்து புசிப்பதற்கு போகங்களைக் கொடுத்து, அவன் திருவடியை சேர்வதற்காக வேத ஆகமங்களையும் சமயா சாரியர்களையும் திருமுறைகளையும் எண்ணில்லாத காலமாககொடுத்துள்ள இறைவனை மறக்கலாமா?உற்று நினைத்தால் உருகாத மனமும் இருக்குமா. இப்பொழுது வாழ்கிற நிலை சகலம் எனப்படும்.

இதற்கு மேல் சுத்த நிலையையடைய வேண்டும் அதற்கு அவனை மறவாமலிருக்க வேண்டும். உலகத்தில் ஒரு பழமொழியுண்டு. அஃதாவது (உப்பிட்டவரை உள்ளளவும் நினை) என்பதாகும். மேலே கூறிய உடல் முதலாகிய அத்தனையும் பிறவிகள்தோறும் கொடுத்துதவும் இறைவனை மறப்பதுநன்றி மறந்த செயலாகும். இன்னும் அவனை இல்லையென்றே கூறும் அறிஞர்களும் அவன் கொடுத்த உலகம் முதலியவற்றிலே தான் வாழ்கிறார்கள். இது நன்றி கொன்ற செயலாகும் இவர்களுக்குத்தான் உய்தியே கிடையாது என்கிறார். திருவள்ளுவர் பெருமான், ''எந்நன்றி கொன்றார்க்கும் உய்வுண்டாம் உய்வில்லை செய்ந்நன்றி கொன்றமகற்கு''என்பதால்விளங்கும் மனத்தை முன்னிருத்திக் கொண்டு நமக்கு உபதேசம் செய்செய்கிறார் பட்டினத்துச் சுவாமிகள்=மனமே. நீ இறந்தும் பிறந்தும் துன்பமடையாமல் வாழ வேண்டுமானால் அதற்கு ஒரு மருந்துண்டு, அந்த மருந்தை முறைப்படி உண்டால் அந்த இரு நோயும் வாராது. அந்த மருந்தாவது அம்பல

வாணர் திருவடியை மறவாமலிருப்பது என்கிறார். இதோ அத் திருப்பாடல்.

> “பிறவா திருக்க வரம்பெறல் வேண்டும் பிறந்து விட்டால்
> இறவா திருக்க மருந்துண்டு காணிது வெப்படியோ
> அறமார் புகழ்த்தில்லை அம்பலவாண ரடிக்கமலம்
> மறவா திருமனமே அதுகாணுனக்கு நன்மருந்தே.

என்பதாகும்.

காரைக்காலம்மையார் தலையாலே நடந்து, கயிலாயமலை சென்று பெருமானை வணங்கினார். பெருமான் அம்மையே உனக்கு என்னவரம் வேண்டும் என்று கேட்டருளினார். அம்மையார் தேவரீரை மறவாமலிருக்க அருள வேண்டும் என்றார். அப்பர் சுவாமிகள் தில்லையில் இருப்பவனை, தினைத் தனைப் பொழுதும் மறந்துய்வனோ என்கிறார் = தேவாரம் “பனைக்கை மும்மத வேழ முரித்தவன்-நினைப்பவர் மனம் கோயிலாகக் கொண்டவன் அனைத்தும் வேடமாம் அம்பலக் கூத்தனை, தினைத்தனைப் பொழுதும் மறந்து உய்வனோ’ என்கிறார்.

சிவபெருமானை மறந்தவர்கள், மிருகம் பேய் முதலிய வற்றோடு ஒப்பிடப்படுவார்கள். இக்கருத்தை சுந்தரமூர்த்தி சுவாமிகளும் மாணிக்கவாசக சுவாமிகளும் அருளுகிறார்கள். “நாயேன்பலநாளும்நினைப்பின்றி மனத்துன்னைப் பேயாயாய்த் திரிந்தெய்த்தேன்” (தேவாரம்) ‘நாயினேனுனை நினைபவு மாட்டேன் நமச்சிவாய என்றுன்னடி பணியாப் பேயனாகிலும் பெருநெறி காட்டாய்! (திருவாசகம்) மையபலென்கிற மயக்க மில்லாத ஞானசிகா மணிகளே இப்படிக் கூறுகிறார்கள். ஆனால் நமக்கு கவலையில்லை பக்தர்களில் சிவபூசை அன்பர் களில் பலபேர் சிவபெருமானை மறந்தற்த ஏதுவான பேச்சுக் களிலும், மனிதர்களோடும் இடந்திலும் பொழுது கழிப்ப திலே காலத்தைப் போக்தகிறார்கள். மகிழ்ச்சியும் அடைகிறார்கள் சிவபெருமான் கணக்கிலே வல்லவரென்பதை மறந்து விட்டார் போலும். தொண்டர்களுந்த இலக்கண முண்டு. சேக்கிழார் சுவாமிகள் அருளுகிறார் (பெரியபுராணம்)

நின்றாலும் இருந்தாலும் கிடந்தாலும் நடந்தாலும்
மென்றாலும் துயின்றாலும் விழித்தாலும் இமைத்தாலும்
மன்றாடு மலர்ப்பாதம் ஒருகாலும் மறவாமை
குன்றாத உணர்வுடையார் தொண்டராங் குணமிக்கார்.

என்பதால் விளங்கும்

விளங்கவே இறைவனை, க்ஷணப் பொழுதும் மறவா மலிருந்தால் அவனை எளிதாகப் பிடித்து இருத்திக் கொள்ள லாம் (இடைவிடாதுன்னைச் சிக்கெனப் பிடித்தேன். எங் கெழுந்தருளுவதினியே) என்கிறார் மாணிக்கவாசகசுவாமிகள் அரசாயிருந்த அதிவீர ராமபாண்டியர் சிந்தை—எந்த நேரமும் சிவபெருமான் திருவடியை எண்ணிக் கொண்டிருக்குமாம். அவர் கூறும் திருப்பாடலைக் கவனியுங்கள்.

இருக்கினும் நிற்கும் போதும் இரவுகண் துயிலும் போதும்
பொருக்கென நடக்கும் போதும் பொருந்தியூண் துய்க்கும் போதும்
முருக்கிதழ்க் கனிவாயாரை முயங்கி நெஞ்சழியும் போதும்
திருக்களா வுடையநம்பா சிந்தையுன் பாலதாமே.

என்பதால் விளங்கும், இமைப் பொழுதும் என்னெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க—என்றும் ஓயாதே உள்குவார் உள் ளிருக்கும் உள்ளானை என்றும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளுகிறார். ஆகவே இறைவனைப் பற்ற மறவாமலிருக்க வேண்டும் மறவாமலிருந்தால் மயக்கந் தீரும். தாயுமான சுவாமிகளும்,

வந்தவரவை மறந்துவிட்டு மாதர் பொன்பூமி
மயக்கத்திலாழும் – என்பார்.

ஆகவே இவ்வளவு அரிய உண்மைகளை திருஞானசம்பந்த சுவாமிகள் மறப்பிலார் கண்டீர் மையல் தீர்வாரே என்பதனால் விளக்குகிறார்.

கண்டீர் என்பது உறுதி பயக்கும் திருவாக்காகும்=யாக குண்டங்களை நிரம்பச் செய்து சிவாக்கினியை வளர்த்து உயிர்கள் விரும்பும் பயன்களை அடையுமாறு அருளுகின்ற சிறப்புடைய வேதியர்கள் வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலத்தில்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

உயர்மானுடம் – 7

# தினக்கடமைகள்

புலவர் ச. தனுக்கோடிஇராமசாமி பி. ஏ. அவர்கள்,
தமிழாசிரியர் ஆ. வை. உயர்நிலைப்பள்ளி,
சாத்தூர் 626203

(மலர் 27 இதழ் 2 119-ம் பக்கத் தொடர்ச்சி)

பகவத் கீதையின் சாரமே விருப்பு வெறுப்பின்றி தன் கடமைகளைச் செய்யவேண்டும் என்பதுதான். தினக்கடமைகளை எவ்வித சோம்பலுக்கும் விருப்பத்திற்கும், வெறுப்பிற்கும் இடந்தந்து மாற்றுது செய்துவந்தால் அவர்கள் தேவரனையர் ஆவர். மனிதர்கள் அவ்வப்பொழுது உணர்ச்சி வேகத்தால் எவ்வளவோ வேலைகளைச் செய்கிறார்கள். அடுத்துத் தொடர்ந்து சோம்பலுக்கு இடங்கொடுத்துக் காலம் தள்ளுகிறார்கள். இதனால் வளர்ச்சியின்றி, காலப் போக்கில் வலுக்குன்றி, சமூக மரியாதையை இழந்து நோய்களுக்கும் கடன்களுக்கும் ஆட்பட்டு இவ்வுலகை விட்டுப் பரிதாபமாக மறைகிறார்கள்.

திட்டமிட்டு தன் தினக்கடமைகளை முடிக்க முனைபவர்கள் வாழ்வில் மென்மேலும் உயர்வடைவார்கள். அவர்கள்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

பொருந்தி ஆடுகிறானென்றும் நமக்கு அறிவுறுத்துகிறார். மனமானது ஒரு நொடியில் நூறு கோடி எண்ணங்களை எண்ணும் இயல்புடையதாயிற்றே. கணப் பொழுதும் இறைவனை மறவாமல் எப்படி இருப்பது என்று கேள்வி எழும் மறவாமல் இருக்க வழியுண்டு, விடை அடுத்த திருப்பாசுரத்தில் அருளுகிறார்.

திருஞானசம்பந்தர் திருவடி வாழ்க!!

(தொடரும்)

உயர்வை உலகின் எந்தச் சக்தியாலும் தடையிட்டு நிறுத்த முடியாது. திருக்குறள் முழுக்கவே அந்தத்தூய கர்மயோகத்தைத் தான் கூறுகிறது என்று கூடக் கூறிவிடலாம். வள்ளுவப் பெருந்தகை தன் உலகப் பொதுமறையில் ஆள்வினையுடைமை, வினைத் தூய்மை, வினைத்திட்பம், வினை செயல்வகை ஊக்கமுடமை, மடியின்மை போன்ற பல அதிகாரங்களில் நேரடியாக மானிட உயர்வுக்கு எவ்வாறு அவர்களின் ஊக்கமிக்க செயல்கள் உறுதுணையாகின்றன; சோம்பல் கொண்டால் எவ்வாறு கேடு வருகிறது என்பதை எல்லாம் மிகத் தெளிவாக விளக்கியுள்ளார்.

எண்ணங்கள், நம்பிக்கைகள், பிரமச்சரியம் போன்றவெல்லாம் ஒருவரின் ஒழுங்கான தினக்கடமைகளால் முன்னேற்றமடைகின்றன. ஒழுங்கற்ற தினக்கடமைகளால்இவை சிதறுண்டு நாசமடைகின்றன. ஒழுங்காகத் தன்தினக்கடமைகளைச்செய்வதே ஒருபெரிய நோன்பாகும் வள்ளுவப் பெருந்தகை 'தவஞ் செய்வார் தங்கருமஞ் செய்வார்' என்று கூறுகிறார்.

அவரவர்கள் தங்கள்தங்கள் வயது,வசதி,பணி அமைப்புகளுக்கு ஏற்ப ஒரு தினக்கடமை அட்டவணையைத் தயாரித்து அதன்படி செயல்படுவது நல்லது இங்கு மாதிரிக்கு ஓர் அட்டவணையை நான் கொடுக்கிறேன். காலை 4—00 மணிக்கு துயிலெழுதல்:

படுக்கையில் அமர்ந்த வண்ணம், தனக்கு எல்லோரையும் நேசிக்கும் எண்ணம், கடமைகளில் ஊக்கம், பொறுமை, அஞ்சாமை, சத்தியம் வேண்டும் என ஆழமாக நினைத்தல் வேண்டும். இறைவனை நம்புவோர் இவற்றை அருள இறைவனிடம் மன்றாட வேண்டும். எழுந்து தன்னுடைய படுக்கையை தானே எடுத்து ஒழுங்குபடுத்தி வைப்பதே சிறந்தது, பின் மலம் கழித்து பல் துலக்கி முகம் கழுவவேண்டும்.
காலை 4—30 - 5—00 மணி

உடற்பயிற்சி செய்யவேண்டும் ஆசனங்கள் போடுவது மிகவும் நல்லது பின் பிராணயமம் செய்யவேண்டும். இது சிந்தனையை வளர்த்து, உடல்நோயைப் போக்கி உறுதிகள் அளித்து ஆயுளை நீட்டும்.

காலை 5—00 - 6—00 மணி:

நூல்களைப் படிக்கலாம். தனக்குள்ள பிற கடமைகளைச் செய்யலாம். வேளாண்மைசெய்வோர் மாடுகளுக்குஉணவளித்தல் தூய்மைசெய்தல் போன்ற வேலைகளைக் கவனிக்கலாம்.

காலை 6—00 - 6—45 மணி

காலை ஞாயிற்றொளியில் தோட்ட வேலை செய்வது மிகவும் சிறந்ததாகும் அதனால் உடல் உரம் மட்டுமன்றி தார்மீக பலமும் மனச்சாட்சி வலிமையும் ஏற்படும். உடல் உழைப்பை மதிக்கும் நாடு ஆன்ம பலத்தோடு இன்புற்று வாழும். இதிலடங்கிய பெருமைகளை விரிக்கப் பல நூல்கள் எழுத நேரிடும்.

காலை 6—45 - 7—30;

முகமயிர் மழுக்குதல் குளித்தல், உடையணிதல்.

காலை 7 - 30 - 7—35;

வழிபாடு, பகுத்தறிவு வாதிகள் தங்கள் லட்சியங்களை எண்ணி, தன்னுடைய மனவளர்ச்சி, சமூக வளர்ச்சிக்காக சிந்தித்தல், 3 நிமிட நேரம் புலன்களின் அலைச்சலைப் படிப்படியாகக் கட்டுப்படுத்த முயற்சிக்கவேண்டும்.

காலை 7- 40 - 8—00 சிற்றுண்டி

காலை 8—00 மணிக்கு தங்கள் அலுவல் மேற் கொள்ளுதல்.

பகல் மணி 11 — 12 மணிக்குள்

நண்பகல் உணவு அதன்பின் ஒன்று அல்லது இரண்டு மணிநேரம் யுக்தம்போல் ஓய்வு. தூங்காமல் ஓய்வெடுப்பது நல்லது என்கிறார்கள் பெரியவர்கள். தூங்குவதில் உள்ள தீமைகள் எனக்குத் தெரியவில்லை. தூங்கியே ஓய்வெடுக்கலாம். அதுவே நல்லதாகத் தெரிகிறது.

பிற்பகல் 2—00 - 5—00 மணி: பணி

மாலை 5—20 - 6—20 மணி:

குழந்தைகளோடு மகிழ்வாகக் கழித்தல்.

மாலை 6—20 - 7—20 மணி'

நண்பர்களோடு திறந்த வெளியில் உலாவி மகிழ்தல்.

இரவு 7—30 மணி: இரவுச் சாப்பாடு.

இரவு 7—45 - 8—30 மணி: ஏதாவது வீட்டுவேலை செய்தல்

இரவு 8—40 - 9—40 மணி: படித்தல் எழுதுதல்.

இரவு 9—50 மணி:

கட்டாயமாக படுக்கைக்குச் செல்லுவது நல்லது.

படுக்கையில் அமர்ந்து அன்று நடைபெற்ற செயல்களை எண்ணி ஆய்தல்வேண்டும் தவறுகளுக்காக மெய்யாக வருந்துதல் வேண்டும் அவற்றை வரும் நாட்களில் குறைக்க முயற்சி செய்ய எண்ணுதல், இந்த அளவிற்கு வெற்றியை அளித்த சக்திக்கு நன்றி கூறி இனிய பாடலை மனதிற்குள் ஓதி நல்ல நினைவுகளோடு துயில வேண்டும்

ஞாயிறு பிற விடுமுறை நாட்களில் நல்ல புத்தகங்களைப் படிக்கவேண்டும். கட்டுரைகள், நல்லகதைப் புத்தகங்களைப் படிக்கலாம். உறவினர் நண்பர்களோடு அளவளாவுதல் செய்யலாம் மனதிற்கு நிறைவையும் இன்பத்தையும் நல்கும் நல்ல திரைப்படங்களுக்குச் சென்று வரலாம். காலையிலும் மாலையிலும் இடுப்பளவு நீரில் 10 நிமிடம் நிற்பது மிகவும் வேண்டற்பாலது.

மேன் மேலும் உயர்வோம் என்று விரும்பி முயல்கின்றவர் தம்முடைய புகழ் கெடுவதற்குக் காரணமான செயலைச் செய்யாமல் விடவேண்டும் என்று வள்ளுவப் பெருந்தகை கூறியுள்ளார். (குறள் 653)

காலம் நீட்டித்தல், மறதி, சோம்பல், அளவு மீறிய தூக்கம் ஆகிய இந்நான்கும் கெடுகின்ற இயல்பையுடையவர்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

# துறவினில் அகம்

திரு. ச. தேவதாசன் அவர்கள்,
கணக்கர் குமாரசாமி மடம்,
கேதாரகட்டம் வாரணசி.

துறவு என்றால் துறப்பது, துறவிகள் என்றால் துறந்தவர்கள் என்று எல்லோருக்கும் தெரியும். ஆனால் எதை துறந்தவர்கள் துறவிகளாவார்கள்? இந்த உடம்பில் உள்ள ஐம்புலன்களால் உணர்ந்து அறிந்து செய்யப்படும் நிகழ்ச்சிகளே உண்மை எனவும், அவைகளால் கிடைக்கும் அழியக் கூடிய நிலையில்லா இன்பமே நிகரில்லா நிலையான பெரியது என்று எண்ணும் எண்ணத்தை துறக்கிறவர்கள் துறவிகள் ஆவார்கள். ஐம்புலனை அடக்கி மௌனத்தைக் கொண்டு உள்ளத்

(முன் பக்கத் தொடர்ச்சி)

விரும்பி ஏறும் மரக்கலம் என்று வள்ளுவர் எச்சரிக்கை செய்துள்ளார். (குறள் 605)

> "எனைத்திட்பம் எய்தியக் கண்ணும் வினைத்திட்பம்
> வேண்டாரை வேண்டாது உலகு" (குறள் 670)

என்று சிறப்பாகக் கூறியுள்ளார்.

பலரும் இகழவும், மனைவி, குழந்தைகள் வருந்தவும், வறுமை, காமம், வஞ்சகஎண்ணங்கள், குரோதம் இழிவுகளில் மனிதர்களைத்தள்ளுவது அவரவர் உள்ளங்களில் தேங்கியுள்ள காலம் நீடித்தல், மறதி, சோம்பல், அளவுக்கு மீறிய தூக்கம் ஆகியவைதான். இதை அறிந்து எல்லோரும் காலந்தாழ்த்தாது இன்றே இவற்றை விரட்டித் தங்களுக்கு ஏற்ற தினக்கடமை அட்டவணையைத் தயாரித்து செயல்பட முயலவேண்டும். அட்டவணையிலிருந்து ஆயிரம் முறை தவறிவிட்டாலும் மீண்டும் மீண்டும் அட்டவணைப்படி செயல்பட்டுவாழ முயல வேண்டும் அதில்தான் மனிதனின் சொர்க்கமே உள்ளது

———

தால் உணரப்படும் ஒன்று உண்டு என்றும், அதனுல் வரும் இன்பமே ஈடில்லா இணையில்லா நிகரில்லா நிலையான இன்பம் என்று அறிவது. அறிய முயலுவதே துறவு அதைப் பற்றி சிறிதாவது பார்ப்போமே!

மனிதர்களில் இருவகை உண்டு. ஒன்று தான் மட்டும் வாழ்ந்தால் போதும் தன் காரியம் வெற்றிப்பெற்ருல் போதும் என்று வாழும் மனிதர்கள் ஒருவகை. இரண்டு, தானும் வாழ வேண்டும், உயரவேண்டும், தன்னைப் போல மற்றவர்களும் வாழவேண்டும் என்று எண்ணி தன்னுல் இயன்ற உதவியினை செய்து இல்லையென்ருல் எடுத்தும் சொல்வார்கள் இது ஒரு வகையாகும். இதுபோல துறவிகளையும் இருவகைப்படுத்த லாம். புலன்களை அடக்கி தான், நான் என்ற எண்ணத்தை விட்டு உயருவதற்குஏற்ற தகுந்தவழியை கடைபிடிப்பார்கள் மற்றவர்கள் வழியில்குறுக்கிடவும் மாட்டார்கள். அவர்களைப் பற்றி எண்ணவும் மாட்டார்கள். இதனுல் மற்றவர் எவருக் கும், எவ்வித வழியும் உணர்த்தப்படுவதில்லை. இவர்களைப் போலவும் உண்டு. இப்படி தான், நான் என்பதை துறந்து, உயர்ந்த நிலையை எய்தியவர்கள் உலகத்தின் மீது பலிவு காட்டு கிருர்கள். அதனுல் உயர்ந்த வழியில் அவர்களைத் திருப்ப 'நான்' என்ற அகத்தை உலக மக்களுக்காக திரும்பவும் ஏற்று மனதில் நிறுத்தி விடுகிருர்கள் இவர்களைப்போலவும் உண்டு. இவர்கள், தான் தக்க வழியில் சென்று சிறப்பு நிலை எய்தியது போலவே மற்றவர்களும் தன் வழியில் வந்து உயர்ந்த நிலையை அடையப் பாடுபடுவார்கள். மரத்தை வெட்ட மரக்கிளையே பிடியாக பயன்படுவது போல ஐம்புலனைக் கொண்டே ஐம் புலனை அடக்குவார்கள்.

கண்ணுல் நல்லதைப் பார்த்தும் காதால் இனியதை கேட் டும் வாயால் நன்மையை சொல்லி, வலியுறுத்தி வன்மையாய் பேசுவார்கள். கண்ணுல் காண்பதே மெய்! எண்ணத்தில் கொண்டதே கொள்கை! என்ற இறுமாப்பில் வாழ்ந்து வரும் கீழ் மக்களைக் கண்டு வருந்தி எப்படி வாழவேண்டும் என் பதை எடுத்துரைத்து ஏற்றமுடைய நன்கருத்தை பிரசாரம்

செய்வார்கள். இத்தகைய துறவே எவ்வகையிலும் சிறப்பு உடையது என்பதற்கு ஸ்ரீ ஆதிசங்கராச்சாரிய ஸ்வாமிகள், ஸ்ரீ ஆதிகுமரகுருபரஸ்வாமிகள் ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர், மற்றும் விவேகானந்தர், போன்ற துறவிகளையே முனிவர்களாக எடுத்துக் காட்டாக சொல்லலாம்.

ஸ்ரீ விவேகானந்தர் தன் புலன்களை மறந்து தான், நான் என்ற அகத்தைத் துறந்து, உயர்ந்து தனிப்பெரும் சக்தியைப் பெற்று சமாதி நிலையை அடைந்து, முக்தி பெரும் நிலையிலே இருந்ததை, ஸ்ரீ இராமகிருஷ்ண பரமஹம்சர் அறிந்து அதைத் தடுத்து நிறுத்தினர். இவ்வுலகத்திற்கு ஆற்றும் தொண்டு எத்தனையோ உனக்கு உண்டு என்பதை எடுத்துரைத்தார். இதனுல் அடக்கிய ஐம்புலனை தான் மட்டும் உயர்வதற்கு என்பதை விட்டு அவைகளை உலகத்திற்கு உயர்வழியை காட்டும், ஒரு திறமையான கருவியாக பயன்படுத்தினர். உயர உயர்ந்து சென்றவர், உலகத்திற்காகவேண்டி துறந்த நான் என்ற அகந்தையை திரும்பவும் ஏற்றுவிட்டார். தான்போகும் பாதையிலேயே தன்னை சார்ந்தவர்களையும் அழைத்தார். தர்மத்தினை தாராளமாய் தடையின்றி செய்தும், செய்யவும் தூண்டினர். தான் கொள்கையாய் கொண்ட நல்ல கருத்தினை இலட்சியத்தினை நாட்டறிய செய்வதற்கு நாடுகள் முழுவதும் சுற்றினர். தான் போகும் சிறந்த வழியிலே நாட்டு மக்களை திசைதிருப்ப எத்தனை பாடுபட்டார். சங்கங்கள் அமைத்தும் தர்மசாலைகள் மடங்களை கட்டியும் தான் சொல்லும் தர்மத்தையும், அறத்தையும் நிலை நிறுத்தினர் விவேகானந்தர்.

அதற்கு முன்பே தோன்றிய ஸ்ரீ ஆதிகுமரகுருபர சுவாமிகள் தனக்கு ஒப்பில்லாது உயர்ந்து நிகரில்லாது இருந்தார். தெய்வத்தின் அருள்பெற்று, அவர் மக்களால் தெய்வமென வணங்கப்பெற்ருர். அத்தகைய நிலையை அடைந்த அப்பெரும் சுவாமிகள் இவ்வுலக மாயை என்னும் இருட்டில், வாழும் ஏழைமக்களுக்காக மனம் இறங்கிதான், தன் உயர்ந்தநிலையை விட்டு சிறிது கீழ் இறங்கி துறந்த "நான்" என்ற அகத்தை ஏற்று முகலாய மன்னனை அடிபணியச் செய்தார். அதனுல்

என்றும் அழியாததொரு மடாலயத்தை ஸ்ரீ காசியம்பதியில் நிறுவினர்! நமக்காக வேண்டி நான் என்ற அகத்தை கொண்டதால் தான் அதன் பலனை இன்றும் நாம் அனுபவிக்கிறோம்.

இத்தகைய மட்டில்லா மாபெரும் துறவிகளின் வழி வழியாய் வந்தவர்களே இன்றும் நம் நாட்டில் இருந்துகொண்டு முன்பிருந்தோர். முறையென வகுத்தளித்த பாதையில் சென்று துறவறத்தைக் கடைப்பிடித்தும் துன்பங்கள் நேரிடினும், துணிவுடன் அறத்தையும், தர்மத்தையும் கட்டி காத்து வருகிறார்கள்.

ஒருபொருள் தமக்கு கிடைத்து அதனல், தனக்கு உபயோகமில்லையென அறிந்து அதை உபயோகிக்காமல் ஒதுக்குவதைவிட அப்பொருள், எவ்வகையிலாவது எவருக்கேனும் பயன்படுமாறு செய்வதுதானே சிறப்புடமை! அதுபோல, ஆண்டவனல் கொடுக்கப்பட்ட ஐம்புலன்களை அடக்கி, அவைகளால் தனக்கு வரும் இன்பங்களைத் துறந்து, அவைகளைக் கொண்டே நல்ல பல அறங்களைச் செய்தும், நல்ல வழியினை எடுத்துச் சொல்லியும், செய்கையில் செய்தும் போற்றும் பல நூல்களை வெளியிட்டும், வருகின்ற துறவிகளே பலவகையிலும் மேம்பாடு உடையவர்கள் போற்றிவணங்குவதற்கு உரிய உயர்ந்த துறவிகள் இவர்களே என்பதற்கு இன்னும் என்ன சான்று வேண்டும்?

நாம் எத்தகைய வேலையோடும் எவ்விடம் அவசரமாக சென்றாலும், ஆலயத்தை கண்டதும் அவ்விறைவன் எண்ணம் நமக்கு வருகிறது. அதுபோல் அம்மாபெரும் துறவிகளின் வழி, வழியாய் வருகின்ற, இப்பெரும் துறவிகளைக் கண்டதும் வணங்கியதும் நமக்கு பக்தியால் பணிவும், அன்பினல் நமக்கு அடக்கமும் வருகிறது என்பது அனுபவத்தால் அநேகர் அறிந்த உண்மை. அம்மடாலயங்களைக் கண்ணல் கண்டதுமே கோவிலைப் பார்க்கின்ற எண்ணம் வருகிறது. கோவிலும் மடமும் ஒன்றே. உலகில் தெய்வம் இலைமறைகாய் போலிருந்து எல்லாவற்றையும் உணர்த்துகிறார். அப்

(தொடர்ச்சி அடுத்த பக்கம்)

சிவ சிவ]

# திருமுருகாற்றுப்படை
## உரை விளக்கம்

' செந்தமிழ்ச் செல்வன் '
புலவர்: திரு. சிக்கல். சி. சானகிராமன் அவர்கள்,
தெற்கு வீதி சிக்கல் (அஞ்சல்) நாகை (வட்டம்)

---

[மலர்-27 இதழ்2 -124ம்-பக்கம் தொடர்ச்சி]

### பழமுதிர் சோலை

திருப்பரங்குன்றம், திருச்சீரலைவாய், திருவாவினன்குடி, திருவேரகம் குன்றுதோராடல் எனும் படைவீடுகளின் இயல் புகளை உரைத்து; முருகன் எல்லாக் குன்றுகளிலும் கோயில் கொண்டுள்ளான் என நக்கீரர் உணர்த்தினர். இனி முருகன் பழமுதிர் சோலையில் எழுந்தருளியுள்ள திறத்தினை கூறு கின்றார். பழமுதிர் சோலை என்பது மதுரைக்கு அருகாமை யிலுள்ள அழகர்மலை என்பர் இப்போது உள்ளது போல அன்றும் அங்கு திருமால் கோயில் விளங்கியது அத்துடன் முருகன் கோயிலும் இருந்ததாகக் கூறுவர். பரிபாடலில் இருங்குன்றம் என்று கண்டிருக்கின்றது. இப்பகுதியில்

---

(முன் பக்கத் தொடர்ச்சி)

படி உணர்த்துவதை உணர தெரியாது உலகில் வாழும் ஏழை மக்களுக்கு இறைவனைப் பற்றி உணர்த்தி தெய்வச்சிந்தனையை தூண்டிவிடும் சிறப்பான சக்தியை, தெய்வத்தின் அருளினால் இவர்கள் பெற்றவர்கள். அவ்விறைவனையும் அவ்விறைவன் அருள் பெற்ற இம்மாபெரும் துறவிகளையும் வணங்குவதும் தரிசிப்பதும் மானிடபிறவி எடுத்ததின் பெரும்பயனாக எண்ண வேண்டும். அப்படி எண்ணிச் செய்வதே நாம் நல்வழியில் போகிறோம் என்பதற்கு ஒரு அடையாளம் இவ்வகைத் துறவி கள் உலக மக்களை உண்மையான பரம் பொருளை உணரச் செய்யவேண்டும், என்ற உயர்ந்த ஒரே எண்ணத்தை மனதில் கொண்டு துறவினில் அகத்தை ஏற்றுக் கொள்கிறார்கள்.

நக்கீரர் முருகனை யாவர்க்கும் அருள் சுரக்கும் கருணைக் கடலாய்ச் சித்தரிக்கின்றார் அவன் இருக்கும் இடங்கள் "காடுங் காவும்கவின் பெறுதுருத்தியும்" என்று எங்கும் இருக்கின்றான் சாதாரண மக்களுக்கும் எளிதில் அடையக் கூடியவன். நக்கீரர் முருகனடியார்களை முப்பான்மையாக வகுத்துள்ளார். நசையுநர், அலந்தோர், பரிசிலர் என்று, அதோடு முருகன் நமக்கு அருளும் "பெரு இயற்கை" இன்னது என்பதை மிக அழகுபடக் கூறியுள்ளார் முருகன் தோத்திரமும் சொல்லப் படுகின்றது யார் யார் எங்கெங்கு எப்படி எப்படி வழிபடுகிறார்களோ அவர்களுக்கு ஆங்காங்கு அப்படி அப்படி வந்து அருள் செய்வான். ஆகவே இப்பகுதியில் ஆன்மாக்களின் வினைக்கீடாக அவரவர் பக்குவம் அறிந்து அவரவர் நிலையில் காட்சி தருவன் என்று முடிக்கின்றார்.

216—225 சிறுதினை மலரொடு விரைஇ மறி அறுத்து
வாரணக் கொடியொடு வயின்பட நிறீஇ
ஊர்ஊர் கொண்ட சீர்கெழு விழவினும்
ஆர்வலர் ஏத்த மேவரு நிலையினும்
வேலன் தையஇப வெறிஅயர் களனும்
காடும் காவும் கவின்பெறு துருத்தியும்
யாறும் குளனும் வேறுபல் வைப்பும்
சதுக்கமும் சந்தியும் புதுப்பூங் கடம்பும்
மன்றமும் பொதியிலும் கந்துடை நிலையினும்.

உரை விளக்கம் :—

ஊர்தோறும் முருகனுக்காக மக்கள் விழா எடுக்கிறார்கள் சிறிய தினை அரிசியைப் பூக்களோடு கலந்து படைத்துவைத்து ஆட்டைப்பலி கொடுக்கின்றனர். கோழிக் கொடியினை உயர்த்திக் கட்டியுள்ளனர். விழாவிற்குரிய இடத்தை அமைத்து இவ்வாறு ஒவ்வோர் ஊரிலும் சிறப்பு மிகுந்த விழாவினை மக்கள் கொண்டாடுகின்றனர். அங்கெல்லாம் முருகன் நிலைபெற்று விளங்குகின்றான். அன்பர்கள் விரும்பிச் சென்று துதித்து வழிபடும் இடங்களிலும், பூசாரி தெய்வம் ஏறி ஆடும் இடங்களிலும். காடுகளிலும், சோலைகளிலும், குளங்களிடத்தும் வேறு பல இடங்களிலும், நான்கு தெருக்கள் கூடுமிடங்

களிலும், பிற சந்திகளிலும், புதிய பூக்களைக் கொண்ட கடம்ப மரங்களிலும், ஊர்ப் பொது இடங்களிலும், தறிநிலை பெற்றுள்ள தலங்களிலும் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ளான். இனி, மனம் ஒன்றி வழிபடின் ஆங்கு முருகன் தோற்றுவான் என்று நக்கீரர் உரைக்கின்றார். உற்சவம் தொடங்குமுன் கொடியேற்றுதல் மரபு. அதற்கு முன்காவு கொடுப்பதும் வழக்கம். ''ஊர் ஊர் கொண்ட'' என்றதனால் எங்கெங்கு உற்சவம் கொண்டாடப்படுகின்றதோ அங்கெல்லாம் அவன் பிரசன்னமாயிருப்பான் என்பது கருத்து.

226—237 மாண்தலைக் கொடியொடு மண்ணி அமைவர
நெய்யொடு ஐயவி அப்பி ஐது உரைத்துக்
குடந்தம் பட்டுக் கொழுமலர் சிதறி
முரண் கொள் உருவின் இரண்டுஉடன் உடீஇச்
செந்நூல யாத்து வெண்பொரி சிதறி
மதவலி நிலைஇய மாத்தாள் கொழுவிடைக்
குருதியொடு விரைஇய தூவெள் அரிசி
சில்பலிச் செய்து பல்பிரப்பு இரீஇச்
சிறுபசு மஞ்சளொடு நறுவிரை தெளித்துப்
பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை
து[illegible]ற அறுத்துத் தூங்க நாற்றி

**உரை விளக்கம்:–**

மலை நாட்டுச் சிறிய ஊர் அங்கு முருகனின் கோயில், மாட்சிமையுடைய தலையினைக் கொண்ட கோழிக் கொடி கோயில் வாயிலிலே காணப்படுகிறது. கோயில் தூய்மையாகக் கழுவப் பெற்று உரிய அலங்காரங்களோடு திகழ்கின்றது. நெய்யொடு வெண்சிறு கடுகைக் கலந்து கோயில் வாயிற்படி முதலிய இடங்களில் காவல் சிறக்கக் குறமகள் ஒருத்தி பூசுகின்றனள். கோயிலுக்குரிய பணியை செய்யுங்கால் மெல்ல மந்திரங்களை உரைத்தவாறும், வணக்கத்தோடும் அவள் செயல்படுகின்றனள். கோயிலில் உரிய இடங்களில் நல்லமலர்களைத் தூவுகின்றாள் இரண்டு வெவ்வேறு நிறமுடைய ஆடைகளைக் குறத்தி ஒன்றன் மேல் ஒன்றாக உடுத்திக் கொள்கிறாள். சிவந்த நூலினை முன் கையிலே காப்பு நாணாக அணிகின்றாள்.

வெண்மையான பொரியைப் பலியாகத் தூவுகிருள். மிக்க வலிமை கொண்ட பெரிய கால்களையுடைய கொழுத்த ஆட்டுக்கிடாயின் இரத்தத்தோடு கலந்த தூய வெள்ளிய அரிசியும், பிறப்லிப் பொருள்களும் பல பிரப்பங் கூடைகளில் முருகன் திருமுன்பு வைக்கப்பட்டுள்ளன. சிறிய பசு மஞ்சளுடன் பல வாசனைப் பொருள்களைக் கல ந்து அக்கலவையை ஆங்காங்கு குறமகள் தெளிக்கிருள் பெரிய குளிர்ந்த செவ்வலரியின் நறுமணம் வீசும் மாலையை ஒத்த அளவுடையதாக அறுத்துக் கோயில்களில் பல இடங்களிலும் கட்டித் தொங்க விடுகிருள்.

238—249 நளிமலைச் சிலம்பின் நல்நகர் வாழ்த்தி
நறும்புகை எடுத்துக் குறிஞ்சி பாடி
இமிழ்இசை அருவியொடு இன்னியம் கறங்க
உருவப் பல்பூத் தூஉய் வெருவரக்
குருதிச் செந்தினை பரப்பிக் குறமகள்
முருகியம் நிறுத்து முரணினர் உட்க
முருகாற்றுப் படுத்த உருகெழு வியன்நகர்
ஆடுகளம் சிலம்பப் பாடிப் பலஉடன்
கோடுவாய் வைத்துக் கொடுமணி இயக்கி
ஓடாப் பூட்கைப் பிணிமுகம் வாழ்த்தி
வேண்டுநர் வேண்டி ஆங்கு எய்தினர் வழிபட
ஆண்டு ஆண்டு உறைதலும் அறிந்த ஆறே.

**உரை விளக்கம்:-**

செறிந்த மலை நாட்டிடத்து நகரங்களை எல்லாம்வாழ்த்தி, நறுமணம் மிக்க தூபம் காட்டி முருகனைக் குறமகள் வழிபடுகின்ருள். இனிய ஓசையோடு கூடிய அருவியோடு இனிய வாத்தியங்களும முழங்குகின்றன. மலை நாட்டிற்குரிய குறிஞ்சிப்பண் அமைத்து முருகனுக்கு உரிய துதிப் பாடல்ளைக் குறமகள் பாடுகின்ருள். பல நிறங்களுடைய மலர்களை முருகன் முன் தூவி இரத்தத்தொடு கலந்த சிவந்த தினையைப் பரப்பி முருகனுக்குப் படைக்கிருள். முருகனுக்கு மகிழ்வளிக்கும் இசைக் கருவிகள் முழங்குகின்றன. தெய்வக் கொள்கையை மறுப்போரும் அஞ்சுப்படி முருகனே எழுந்தருளுமாறு குறமகள் வழிபாடுகளைப் பொருந்தச் செய்கின்ருள்.

இவ்வாறு உருவப் பொலிவுடைய பெரிய கோயிலிடத்துவரம் வேண்டுவோர் பலர் வந்து கூடியுள்ளனர். முருகனைக் கருதி, தெய்வம் ஏறி வெறிபாடும் அங்கோயிலிடத்தே பலரும் முருகனை வேண்டிப் புகழ்ந்து பாடுகின்றனர், பல கொம்புகள் ஊதப்படுகின்றன. பெருத்த ஓசையுடைய மணிகள் ஒலிக்கின்றன. முருகன் ஏறிவரும் பிணிமுகம் என்னும் தொலைபாத வலிமையுடைய யானையை அன்பர்கள் வாழ்த்துகின்றனர். வேண்டுவோர் வேண்டியனவற்றைப் பெறுமாறு அங்கோயிலில்வழிபட்டு நிற்கின்றனர் இங்ஙனம் முருகனுக்காக வழிபாடு நடைபெறும் இடங்களில் எல்லாம் முருகன் நிலைபெறத் தங்கி இருக்கிறான். இதுவே தாமறிந்த அளவு என்று நக்கீரர் கூறுகின்றார். எங்கும் முருகன் இருக்கிறான் என்று உரைத்து நக்கீரர் புலவரை நோக்கி "நீ முருகனை அடைந்து துதித்து வழிபடு" என்று உணர்த்துகின்றார்

250—268 ஆண்டு ஆண்டு ஆயினும் ஆககாண்தக
முந்துநீ கண்டுழி முகன் அமர்ந்து ஏத்திக்
கைதொழூஉப் பரவிக் கால்உற வணங்கி
நெடும் பெருஞ் சிமையத்து நீலப் பைஞ்சுனை
ஐவருள் ஒருவன் அங்கை ஏற்ப
அறுவர் பயந்த ஆறமர் செல்வ!
ஆல்கெழு கடவுள் புதல்வ! மால்வரை
மலைமகள் மகனே! மாற்றோர் கூற்றே.

---

[தொடரும்]

# முத்தும் - முத்தமும் (3)

திருமதி, ப. உமாதேவி அவர்கள்,
9/49 திரௌபதியம்மன் கோயில் தெரு
அரியாங்குப்பம்—புதுவை-7

தமது வழக்கினைச் சமர்ப்பிக்கும் புலவர் முருகனிடம் தமக்குச் சாதகமான தீர்ப்பினை எதிர்பார்த்து நிற்கின்றார். ஆனால் அவனோ சற்றேனும் அசைந்து கொடுக்கவில்லை. எப்படியெல்லாமோ கூறியும், ஒப்புவமை காட்டியும், ஆலமர் செல்வனின்புதல்வன் வாளாவிருக்கும்நிலை புலவரின்மனத்தை வேதனைப் படுத்துகின்றது. நயந்தும், வியந்தும் வந்த புலவர் சற்றே சினமும் கொள்கின்றார். எனவே அவர் தமது நயமான வேண்டுகோளையும்,பொறுமையையும், காற்றில் பறக்க விட்டவராய் ஆவேசமுடன் சூளுரைக்க முற்படுகின்றார். ''என்னையும் நீ மற்ற மக்களைப் போன்று எண்ணிவிட்டாயா? சொல்லொன்று கூறிச்செயலொன்று நாடும் இழிந்தமக்களுள் ஒருவனாக என்னைக் கருதிவிட்டாயா? அப்படி எண்ணினால் உன் கருத்தை மாற்றிக்கொள். நான் சொன்னால் சொன்னது தான். உன் செம்பவள இதழ் முத்தம், இந்த முத்துக்களை விடத் தூய்மையானது, ஒப்பற்றது, சிறந்தது அதுதான் எனக்கு வேண்டும். இதோ குவிந்து கிடக்கின்றதே எண்ணற்ற முத்துக்கள். அதுவும் பலவகையான, பலதரப்பட்டத் தரளங்கள். அவை எப்படிப் போனால் எனக்கென்ன? எக்கேடு கெட்டால் எனக்கென்ன? என்னைப் பொறுத்தமட்டில், அவை தூய்மையற்றவை, சிறப்பற்றவை, மதிப்பற்றவை. எனக்கு மட்டுமா? என்னைப்போல், உன் புகழ்பாடி, நின்திருவடி பரவும் அடியார்களுக்கும் கூடத்தான்'' என்று உள்ளக் குமுறல் சொற்களில் குதித்தோடப் பொருமிக் கொண்டே போகின்றார்.

புலவரின் அரற்றலைச் செவி மடுப்பவனின் இதழ்களில் இளநகை தோன்றுகின்றது. அந்த மென்னகையைக் கண்ணுற்ற புலவருக்கு அவன் தன்னைப் பரிகசிக்கின்ருனே என்னும் ஐயப்பாடு வந்துவிடுகின்றது, அவ்வளவுதான், அவருடைய பொருமல், சபதம்செய்வதில் வந்து நின்றுவிடுகின்றது.

பெரும் படத்தையுடைய ஆதிசேடனின் உச்சியானது பளுவினுல்குழிந்துபோயுள்ளது. அந்தஉச்சியில் உள்ளபொரும் குண்டகட்படு கடலில் விளைந்த சங்குகள் ஈன்றெடுத்த முத்துக்களை எங்கள் கடைக்கண்ணுல் கூடப் பார்க்கமாட்டோம். இது மட்டுமல்ல,பசுமையான மூங்கில்களினின்று வெடித்துச் சிதறிய நித்திலங்களை வேண்டுமென்று விரும்பி ஒருபோதும் சிந்தையில் நினைக்கவும் மாட்டோம். அலைகள் முழங்க, குளிர்ந்த கொழுந் திங்களானது தண்ணிய வெண்கொற்றக் குடைபிடிக்க, அதன் செழுமையான, இனிய குளிர் நிழற்கீழ் தங்கியிருந்து உருவிலியான காமன் தான் எய்யும் மலர்ச்சரங்களுக்கேற்ற மலர்களைத் தேர்ந்தெடுத்து அம்மலரம்புகளை நன்ருகப் பிணித்த வலிமையான கரும்புவில்லில் வைத்து நாணேற்றுவான். அவ்வாறு அவன் சரந்தொடுப்பதற்கேற்ற முதிர்ந்த கரும்புகளினின்று விளைந்த முத்துக்களையெல்லாம், குளிர் முத்துக்கள் என்று அணுகோம். மொட்டாக உள்ள தாமரை தனது அழகிய இதழ்களை விரித்து அளிக்கும் முத்துக்களையும் தொடமாட்டோம். ஆனுல் முருகா! உன்னுடைய மாணிக்கம் போன்று சிவந்த இதழ்கள் விளைவிக்கும் முத்தங்களைத் தந்தருள்வாயாக! நீண்ட அழகிய தோகையையுடைய மயில் வாகனனே முத்தமருள்க! என்று சூளுரையில் ஆரம்பித்து வேண்டுகோளில் முடிக்கின்ருர்.

பையரவின் உச்சிகுழி யப்பெருங் குண்டகட்
 படுகடற் பணில முத்தம்
பார்வையானுஞ் சிறிது பாரோம் இதன்றிப்
 பசுங்கழை வெடித்த முத்தஞ்
செய்யசிந் தையினுமிது வேணுமென் ருெருபொழுது
 சிந்தியோ முந்தி வட்டத்
திரைமுழங் கக்கொழுந் திங்கள்வட் டக்குடைச்
 செழுநிழற் சம்ப ராரி

எய்யுமலர் வாளியை எடுத்துத் தெரிந்து நாண்
இறுகப் பிணித்த வல்வில்
ஈன்ற குளிர் முத்தத்தை முத்தமென் றணுகோம்
இதழ்க் கமல முகையுடைக்குந்
துப்யமணி முத்தந் தனைத்தொடேம் உன்னுடைய
துகிரில்விளை முத்த மருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்த மருளே.

இதில், ஆழமும், அகலமும் உடைய கடல் சூழப்பட்ட பூமியை ஆதிசேடன் தன் தலையில் தாங்குவதாகவும், அதன் சுமை தாங்காமல், அவனுடைய தலையுச்சி கடலின் ஆழம் போல், குழிந்து போனதாகவும் குறிப்பிடுகின்றார். அதுமட்டுமா? முதலில் செழுந்தண் தேன் முளைக்கும் குமுதவாய் என்று குறிப்பிட்டவர், இப்போது அவனுடையச் சிவந்த இதழ்களை மாணிக்கத்துக்கும், பவளத்துக்கும் உவமையாக்கி, செந்திலதிபதியே உன் மாணிக்க இதழ் முத்தங்களை அருளே என வேண்டுகின்றார்

இளங்கோலக் குமரன், தன்னுடைய குறும்புப் பார்வையாலும். குமின் சிரிப்பாலும் புலவரின் உள்ளத்தைத் துளைத்துக்கொண்டு நிற்கின்றான். குழந்தைகளிடம் பழகுவது அரியதோர் கலை. அவர்களைத் தம்பால் இழுக்கத் தக்கத் திறமை வேண்டும். வலிந்தோ, அச்சுறுத்தியோ அவர்களிடமுள்ளவற்றைப் பெறுதலென்பது இயலாத காரியம். எனவேதான் முத்தம்வேண்டும் புலவர் நயந்து பணிந்து, அன்புடன் கேட்கின்றார். முத்தத்தைச் சிறந்ததாகக் காட்டிய புலவரின் மனம் குமரனின் இதழினை மாணிக்கமாகப் பார்த்தது. மாணிக்கக் கற்களில் சிலகுறைபாடுகள் உண்டல்லவா? அதனால் அவற்றைவிட இவனுடைய செம்பவழ வாயேச் சிறப்புடையது என்று எண்ணுபவர், தமது கருத்தை அவனிடமும் கூறுகின்றார்.

இறுகல்கரு குதல்முரிவி லட்சுமி புடாயமுள்
ளேறல் புகை யேறல் செம்மண்
ஏறல்வெச் சந்திருகல் மத்தகக் குழிவன்றி
இரவியொளி யிற்க ரத்தல்

மறுவறு தகட்டிலோ ரத்திலுயர் தூக்கத்தின்
மன்னுமா தளக விர்ப்பூ
மாந்தளிர் முயற்குருதி செவ்வரத் தங்கோப
மருவுமணி வகைய ளிப்பேர்
மறுகல்வளி யேறல்கல் லேறல்சிப் பிப்பற்று
முரிதல் திருகுதல் சிவப்பு
முருந்திற் குருத்துச் செருந்துருவி யிடையாடி
முரிகுதை வடிவொ துங்கல்
துறுமுகங் கக்கலொளி மட்கல்கர டென்னுத
துகிரில் விளைமுத்தம் அருளே!'
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
துகிரில்விளை முத்தம் அருளே!

என்று வேண்டுகின்றார். செம்மையான மாணிக்கக் கற்களுக்கும் குறையுண்டு என்று கூறி அதன் குறைகளையடுக்கிக் கொண்டே போகும் புலவர், மாணிக்கத்தின் நிறத்தைவிட அழகிய நிறம்பெற்ற உன் இதழ்கள் எந்தக் குறையுமற்றது. குறையற்ற இதழ்களினின்று விளையும் முத்தங்களைத் தந்தருள் வாயாக! என்று கேட்கின்றார். மாணிக்கத்தினின்று முத்துக்கள் விளைவதாகக் காட்டியுள்ள நயம் இன்புறத் தக்கது.

இவ்வளவு கூறியும் இளங்கோலக் குமரப் பெருமான் அசைவதாகக் காணேம். ஆனால் புலவரோ விடுவதாகஇல்லை மீண்டும் மீண்டும் வற்புறுத்துகின்றார். அடிமேல் அடியடித்தால் அம்மியும் நகருமல்லவா? எனவே அவர் மீண்டும் வற்புறுத்த ஆரம்பிக்கின்றார்.

வரிகளையுடைய வண்டுகள் சூழ்ந்து மதுவருந்தக் கூடிய அன்றலர்ந்த தேன்மலர்கள் சூட்டப்பட்ட அழகிய கூந்தலின் நீளத்துக்கும், நிறத்துக்கும் ஒப்பாக மாட்டாது விண்ணில் குடிகொண்ட கார்மேகங்களின் சிறு துளிகளான மழையிடையே பிறந்தநித்திலங்களால் கோக்கப்பட்ட கோவையினை ஒருபோதும் விரும்போம். காதில் அணியப்பெற்ற மகரக் குழைகளின் மீது மோதுமாறு விளங்கும். அழகிய நீண்ட நயனங்களுக்கொப்பாகாமல், கயல்மீன்கள் தடாகங்களில் ஒளிந்து கொண்டன, அவைகள் வாழும் அத்தடாகங்களில்

விளைந்த தரளங்களை எக்காலத்திலும்நயவேம்! பூக்கள்செறிந்த பசுமையான பாளைகளையுடைய கமுகு மரத்தினை யொக்கா எழிலுடைய நீண்ட கழுத்தில் அணியப்படும் மணியாரங்களை யும் விரும்பேம். அழகிய தோளுக்கு எதிர் நிற்கமாட்டாத ஒளிமிக்க அழகிய மூங்கிலில் விளையப் பெற்ற முத்துக்களையும் தொடமாட்டோம் உன்னுடைய முத்தந்தான் வேண்டும் என்று கேட்கின்றார்.

கோதிவரி வண்டுமது உண்டுகுடி கொள்ளுமெங்
　　குழலுக் குடைந்து விண்ணிற்
குடிகொண்ட கொண்டற் குறுந்துளியின் நித்திலக்
　　கோவையொரு கால்வி ரும்பேம்
காதிலுறும் வள்ளைமக ரக்குழை கடக்குமெங்
　　கண்ணுக் குடைந்து தொல்லைக்
கயத்திற் குளித்தசேல் வெண்தரள மென்னிலொரு
　　காலமுங் கருதி நயவேம்
போதிலுறு பசுமடற் பாளைமென் பூகம்
　　பொருந்துமெங் கந்த ரத்தைப்
பொருவுறு வேள்வலம் புரியாரம் இன்புறேம்
　　பொற்றோள் தனக்குடைந்த
சோதிவேய் முத்தந் தனைத்தொடேம் நின்னுடைய
　　துகிரில்விளை முத்தம் அருளே
தோகைமே காரவா கனசெந்தி லாயுனது
　　துகரில் விளை முத்தம் அருளே.

என்று வேண்டுகின்றார்.

(தொடரும்)

சிவ சிவ]

ஸ்ரீ ஆதிசங்கரரின்

# ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம்

திரு. வித்யாதீர்த்ததாஸன் அவர்கள்,
புதுக்கோட்டை (கிழக்கு)

*(தமிழாக்கம் கோவை ஸ்ரீ நடேசக் கவுண்டர்)*

*(மலர் 27 இதழ் 2 132-ம் பக்கத் தொடர்ச்சி)*

## 11. அடிமையாகக் கொண்டு காப்பாய்!

திருநாளைப் போவாரின் கதை மாதிரி மற்றொரு கதை உண்டு. திருச்செந்தூருக்கு அருகில் ஆத்தூர் என்று ஒரு ஊர். அங்கு வேலனென்ற ஒரு பறைக்குலத்தவன் இருந்தான். செந்தூர்க்கோயிலுக்குச் செல்ல வேணுமென்ற எண்ணத்தில், ஈன சாதியானுன தான் செல்லலாமோ கூடாதோ, என்ற ஏக்கத்தில் "முருகா வேலா" என்று இறைவன் பெயர் சொல்லி அலறிக் கொண்டேயிருந்தான் ஒருநாள் ஒரு அந்தணர் நதியில் விழுந்துவிட்டார். வேலன் அவரைத் தீண்டலாமே கூடாதோ எனத் தயங்கினுன். "முருக நாமம்கூறும் நீ என்னைத் தாராளமாகத் தீண்டலாம்"என்றுர் அவ்வந்தணர். வேலன் அவரைத் தீண்டியெடுத்தவுடன், அவர் முருகனுகவே மாறிவிட்டார். பின்னர் வேலன் கோயிலுக்கு வந்தான். கோயில் நிர்வாகிகள் அவனை உள்ளேஅனுமதிக்க மறுத்தனர். அவ்விடத்தில் முருகன் தோன்றி "அவன் பிறவியில் ஏதோ தாழ்ந்த குலத்தின் பிறந்துவிட்டான். அது குற்றமில்லை மேலான குலத்தில் பிறந்தேன் என்ற செருக்குக் கொண்டு அக்ரமம் செய்யும் கர்ம சண்டாளர்கள் தான் தீண்டத்தகாதவர். இவன் யார் தெரியுமா? நாரத மகரிஷி. ஓங்காரத்தின் உட்பொருள் தெரியாத பிரமனை நான் தண்டித்தேன் என்று வருத்தத்தில் தன் தந்தையான பிரமனைத் தண்டித்த என்னைப் பற்றியும் என் தந்தையான சிவபெருமானைப் பற்றியும் நிந்தனை செய்தான். இந்தப் பிறவி ஏற்பட்டது" என்று கூறினுர். எனவே குலத்தால் உயர்வு தாழ்வு கிடையாது அவரவர் செய்கையால்தான் உயர்வு தாழ்வு என்பது அறியலாம் இக்

கதையை அடிப்படையாகக் கொண்டு "முருகா! மற்ற தேவர் கள் முனிவர்களுக்கும் பக்தர்களுக்கும் தான் அருளுவார்கள். பாவிகளுக்கும் அருளக் கூடியவன் நீ ஒருவன்தான்" என்கிறார் ஸ்ரீ ஜகத்குரு.

பிறதேவர் முனிவர்க்கு மிகுபத்தியோர்க்கும்
பிரியங்கள் தருவார்கள்: புலையர்க்கு மருள்வார்
பிறர் யாவர்? மணிவாரி அலைவீசு செந்தில்
பிரானன்றி அறியேன் சொனென் நம்புவீரே! 27

"முருகன் யாவருக்கும் அருளுவான் என்று நான் கூறு வதை நம்புங்கள்!" என நமக்கு உபதேசிக்கிறார் ஸ்ரீ ஆதிகுரு 27 வது ஸ்லோகத்திலே.

தான் ஒருவன்மாத்திரம் அடியவனாக இருந்தால்போதாது நம் குடும்பமே இறைவனுக்கு அடிமையாக இருத்தால்தான் உயர்வு. ஸ்ரீ நீலகண்ட தீக்ஷிதரவர்கள் தமது ஆனந்த சாக ரஸ்தவத்தில்

அம்மா நின் திருக்கோயிலில்லாத
நாட்டினில் யான் அமர வேண்டா!
எம்மோயுன் மெய்ம்மையினை உணர்த்தாத
கலையெதுவு மெனக்கு வேண்டா!
விம்மார்வத்தால் உனது தாள் பரவாக்
கிளையெனக்கு மேவ வேண்டா!
இம்மாய உலகினுனை நினையாத
நாளொன்றும் ஈயவேண்டா. (ஆனந்த 104)

*தமிழாக்கம்: ஸ்ரீ கவிபரசு நடேசக்கவுண்டர்.*

என்று "தெய்வ சம்பந்தமில்லாத எதுவுமே தனக்கு வேண் டாம்" என்கின்றார்கள் அதுமட்டுமல்ல நாம் குடும்பத்து டன் தெய்வ குடும்பத்தில் சேரவேணும்.
எல்லாத் தெய்வங்களையும்

ஆத்தாள் குறத்தி; அப்பன் குமரன், அரனெனக்குப்
பார்த்தால் ஒருமுறை பாட்டனுமாம்; பதினாலுலகும்
காத்தாள் என்பாட்டி; நற்காமன் என்மாமன்; கனவரையைப்
பேர்த்தாலும் பேர்க்கவொண்ணாப்பிள்ளையார்என்பெரியப்பாவே

என்று உறவுகொள்ள வேணும். எனவே தன்னை வழி வழி அடிமையாகக் கொள்ளுமாறு வேண்டுகிறார் ஸ்ரீ ஆசாரியாள்

மனைமக்கள் உறவாளர்; அடியார்கள் தோழர்
மற்றுளபேர் என்றன் மனை வாழும் யாரும்
உனையன்பு கொடு பூசை புரிவோர்கள் தொழுவோர்
உனையோது வோராக! அருள் செந்திலோனே. 28

முருகனடியாருக்கு நோய் வராது துட்டமிருகங்கள் அவரைக் கண்டு நீங்கும். நரகம் கிடையாது

சலங்காணும் வேந்தர் தமக்கும் அஞ்சார்; யமன்சண்
டைக்கு அஞ்சார்;
துலங்கா நரகக் குழியனுகார்; துட்ட
நோயணுகார்;
கலங்கார் புலிக்கும் கரடிக்கும்
யானைக்கும் கந்த நன்னூல்
அலங்கார நூற்றுள் ஒருகவிதான்
கற்றறிந்தவரே;

ஸ்ரீ சுப்ரமண்ய புஜங்கம். அபிநவகுப்தன் என்ற பொறாமைக்காரன் ஸ்ரீ ஆசாரியாளுக்கு மந்திரப் பிரயோகம் செய்து அவருக்கு விஷநோய் வருவிக்க எண்ணினான் என்ற சந்தர்ப்பத்தில் பாடியது. அதனால் ''கொடு நஞ்சு எனை மெலிவிக்க வந்தால் காப்பாற்று'' என வேண்டினார். அவருக்கு மந்திரப் பிரயோகத்தால் துன்பம் உண்டாகவில்லை. ஸ்ரீசுப்ரமண்ய புஜங்கம் பாராயணம் செய்வோருக்குக் கொடியவர்களால் ஏவப்படும் ஏவல், பில்லி, சூன்யம் இன்றும் பலியாது என்பது சத்தியம் அதையே பாடுகிறார் ஸ்ரீ ஆசாரியாள்

கொடிதென்ற மிருகங்கள் பறவைக் குலங்கள்
கொடுநஞ் சவகையென்னை மெலிவிக்க வந்தால்
வடிவிக்ரமச் சத்தியாலே யழித்தே
வாழ்விக்கவே செந்தில் வாழ் கந்த வேளே. 29

*(ஸ்ரீ செந்திலாண்டவன் துணை)*

---

[தொடரும்]

# மூன்றும் திருமுறையின்
## முதற்பாடல்கள் — உரை

திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்

120. திருஆலவாய் பண்: புறநீர்மை

மங்கையர்க் கரசி வளவர்கோன் பாவை
வரிவளைக் கைம்மட மானி
பங்கயச் செல்வி பாண்டிமா தேவி
பணிசெய்து நாடொறும் பரவப்
பொங்கழல் உருவன் பூதநா யகன்நால்
வேதமும் பொருள்களும் அருளி
அங்கயற் கண்ணி தன்னொடும் அமர்ந்த
ஆலவாய் ஆவதும் இதுவே.

பொழிப்பு: மகளிர்க்கெல்லாம் அரசியும், சோழ மன்னனின் மகளும், வரியுடைய வளையலை அணிந்த கையையும் மடப்பத்தையும் உடைய மானியும் தாமரைச் செல்வியும் ஆன, நின்ற சீர் நெடுமாற பாண்டியனின் மாதேவி தொண்டு செய்து நாடோறும் வழிபட, மிக்கெழும் அனல் வடிவுடையவனும் பூதங்களின் தலைவனுமான சிவபெருமான் நான்கு வேதங்களையும் அவற்றின் பொருளையும் அருளிச் செய்து அங்கயற் கண்ணியுடன் எழுந்தருளியுள்ள திருவாலவாய் என்பது இதுதானே!

வளவர்—சோழர்; கோன்—மன்னன்; வரி-கோடு; மானி-மங்கையர்க்கரசியின் பெயர், மானின் நேர்விழி என்ற தன் சுருக்கப் பெயர். ''மானிக்கும் நேசனுக்கும் அடியேன் என்று சுந்தரரும் இப்பெயரைக் குறிப்பிட்டுள்ளார். பங்கயச்செல்வி-தாமரைப் பூவில் உள்ள திருமகள். அங்கயற்கண்ணி என்ற தமிழ்த் தொடர் பின்பு மீனாட்சி என வடமொழித் தொடராயிற்று மதுரையை நெருங்கியதும் திருவாலவாய்க் கோயில் எம்மருங்கினது என்று ஞானசம்பந்தர் வினவியதும் கோபுரத்தைச் சுட்டிக் காட்டித் திருவாலவாய் இது என்று அடியார்கள் கூறிய போது ஞானசம்பந்தர் இப்பதிகத்தை அருளிச் செய்தார். இப்பதிகத்தின் ஒற்றைப் படைப் பாடல்களில் மங்கையர்க்கரசியாரையும் இரட்டைப் படைப் பாடல்களில் குலச் சிறையாரையும் சிறப்பித்துப் பாடியுள்ளார் இப்பதிகத்தைப் பாட வல்லவர் இமையோர் ஏத்த வீற்றிருப்பர்.

———

(தொடரும்)

உ

## திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடம் திருமுறை வெளியீடுகள்

| | | ரூ | பை |
|---|---|---|---|
| 1 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 2 | ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் அருளிச்செய்த காசிக்கலம்பகம் மூலமும் அரும்பதக்குறிப்பும் ... | 0 | 40 |
| 3 | சிதம்பர மும்மணிக்கோவை ,, ... | 0 | 20 |
| 4 | மதுரைக்கலம்பகம் ,, ... | 0 | 40 |
| 5 | மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ் ,, ... | 0 | 60 |
| 6 | திருச்செந்தூர்க் கந்தர்கலிவெண்பா-மதுரை மீனாட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக்கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனாட்சியம்மை இரட்டைமணிமாலை மதுரை மீனாட்சியம்மை குறம் ... | 2 | 70 |
| 7 | திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் ... | 1 | 25 |
| 8 | திருவாரூர் நான்மணிமாலை உரையுடன் ... | 0 | 50 |
| 9 | சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட்கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை ... | 1 | 00 |
| 10 | பண்டார மும்மணிக்கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை ... | 1 | 00 |
| 11 | நீதிநெறி விளக்கம்-ஆங்கிலமும், ஹிந்தியும் ... | 0 | 50 |
| 12 | நீதிநெறி விளக்கமும் நன்னெறியும்-மூலம் ... | 0 | 15 |
| 13 | கந்தர்கலிவெண்பா மூலம் மட்டும் ... | 0 | 10 |
| 14 | கந்தர் கலிவெண்பா (புதிய பதிப்பு) ... | 0 | 05 |
| 15 | அபிராமியந்தாதி மூலம் ... | 0 | 15 |
| 16 | திருஞானசம்பந்த சுவாமிகள் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 5 | 25 |
| 17 | திருநாவுக்கரசு சுவாமிகள் தேவாரம் ( அச்சில் ) ... | | |
| 18 | சுந்தரர் தேவாரம் (புதிய பதிப்பு) ... | 2 | 75 |
| 19 | திருவாசகம் மூலம் (புதியபதிப்பு) ... | 1 | 65 |
| 20 | திருக்கோவையார் (பேராசிரியருரையும் பழையவுரையும்) ... | 4 | 50 |
| 21 | 9ம் திருமுறை-திருவிசைப்பா திருப்பல்லாண்டு மூலம் ... | 0 | 56 |
| 22 | தெளிவுரை ... | 3 | 25 |
| 23 | பெரிய புராணம் (மூலம்) புதிய பதிப்பு ... | 6 | 75 |
| 24 | பதினோராந் திருமுறை (புதிய பதிப்பு) ... | 3 | 50 |
| 25 | [illegible] பனுவல்கள் ... | 0 | 10 |
| 26 | திருத்தொண்டர் புராணசாரம் ... | 0 | 40 |
| 27 | அம்மையார் அற்புதத் திருவந்தாதி ... | 0 | 25 |
| 28 | திருக்கைலாய ஞானவுலா-உரையுடன் ... | 0 | 50 |
| 29 | திருக்கயிலைத் திருமுறை ... | 0 | 37 |
| 30 | பழமொழித் திருமுறை ... | 0 | 25 |
| 31 | அப்பர் விழா வெளியீடு ... | 0 | 25 |
| 32 | Hymns and Proverbs ... | 0 | 30 |
| 33 | திருவாரூர்-திருப்பனுவல்கள் ... | 0 | 10 |

Regist[illegible] With the Registrar of Newspapers for India
Under No. R. No. 1485/57.
Regd No. M. 5574 குமாரகுருபரன்

| | | | |
|---|---|---|---|
| 34 | குமரகுருபரர் வரலாறும், அற்புதத்தேவாரத் திரட்டும் ... | 0 | 30 |
| 35 | கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்) ... | 1 | 75 |
| 36 | திருவாசகம் தேனும் கனியும் ... | 0 | 15 |
| 37 | தேவாரம் பாடும்பயன் ... | 0 | 15 |
| 38 | காசிக்கலம்பகம் உரைநடை ... | 0 | 15 |
| 39 | தாழைத் திருமுறை ... | 0 | 15 |
| 40 | ஐந்து நீதி நூல்கள் ... | 0 | 10 |
| 41 | நவக்கிரகமாண்பு ... | 0 | 25 |
| 42 | ஸ்ரீ சைலம் ... | 0 | 10 |
| 43 | திருவுசாத்தனக் கல்லெழுத்துக்கள் ... | 0 | 37 |
| 44 | செந்திலாண்டவன் மகிமை ... | 0 | 15 |
| 45 | திருக்குறள்–உரைக்கொத்து-அறத்துப்பால் (4–ம் பதிப்பு) ... | 2 | 00 |
| 46 | திருமுருகாற்றுப்படை ... | 0 | 15 |
| 47 | தேவார வைப்புத்தல விளக்கம் ... | 0 | 15 |
| 48 | திருக்குறள் மணக்குடவர் உரை (முப்பாலும் சேர்ந்தது) ... | 2 | 00 |
| 49 | திருக்குறள் (மூலம்) ... | 0 | 25 |
| 50 | திருக்குறள்-அறத்துப்பால்–சிற்றுரை ... | 0 | 20 |
| 51 | முதுமொழிமேல்வைப்பு (குறிப்புரை) – | 0 | 60 |
| 52 | திருக்குறள் அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழிபெயர்ப்பும் ... | 1 | 50 |
| 53 | திருக்குறள்-பொருட்பால் ... | 2 | 50 |
| 54 | திருக்குறள்-காமத்துப்பால் | | |
| | ஷை 53, 54, 55, திருக்குறள் 2 புத்தகமும் ... | 4 | 00 |
| 55 | கந்தர்கலிவெண்பா சகலகலாவல்லிமாலை ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புடன் ... | 1 | 25 |
| 56 | திருவருட்பயன் மூலம் இந்தி, ஆங்கிலமொழிபெயர்ப்புடன் ... | 1 | 00 |
| 57 | சிவகொழுந்து தேசிகர் பிரபந்தம் ... | 3 | 00 |
| 58 | அகத்தியர் தேவாரத்திரட்டு (புதிய பதிப்பு) ... | 0 | 50 |
| 59 | மங்கலம் ... | 0 | 20 |
| 60 | திருஆனைத் திருமுறையும் உருத்திராக்க விதானமும் ... | 0 | 20 |
| 91 | கோதனத் திருமுறை ... | 0 | 16 |
| 62 | தோடுடைய செவியன் கோவண ஆடையன் ... | 0 | 15 |
| 63 | பண்டார மும்மணிக்கோவை உரைநடை ... | 0 | 15 |
| 64 | மகேசுவரபூசை ... | 0 | 15 |
| 65 | திருமந்திரம் . (அச்சில்) | | |
| 66 | திருவிசைப்பா தேனும் கனியும் ... | 0 | 10 |

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்,
''தியாகராஜ விலாசம்'' 53. பிள்ளையார் கோவில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி. சென்னை-60000

அச்சிட்டது:- குமாரகுருபரன் அச்சகம். ஸ்ரீவைகுண்டம், 628601